# தமிழ்ப் பொழில்

துணர்-௰௮, மலர்-௮

சித்திரபானு—கார்த்திகை

(1942, நவம்பர்)

பொழிற்றொண்டர் :

கரந்தைக் கவியரசு

R. வேங்கடாசலம் பிள்ளை

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

2

உ

# தமிழ்ப் பொழில்

சித்திரபானு—கார்த்திகை துணர் ின்அ—மலர் அ. 1942—நவம்பர்

## உள்ளுறை

1. பொழிற்றொண்டர் குறிப்புக்கள் .249

2. சார்லஸ் டார்வின்
திரு. த. பு. நவநீதகிருட்டினனுர்,
விரிவுரையாளர், அண்ணுமலைநகர் 253

3. உழைப்பால் உயர்ந்த ஒருவர்
டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A.,
விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் 259

4. பண்டைத் திருமணம்
திரு. கோ. சி. பெரியசாமிப்புலவர், தமிழாசிரியர்,
புலவர் கல்லூரி, க. த. சங்கம் 265

5. ஊமர் மூவர்
திரு. வித்துவான், K. கோவிந்தனுர், திருவத்திபுரம் 268

6. வால் வெள்ளி
திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள் 275

7. தமிழ் நாட்டுச் சுருக்க வரலாறு
திரு. வித்துவான். அ. கிருட்டினமூர்த்தி,
தமிழாராய்ச்சியாளர், சென்னைப் பல்கலைக்கழகம் 281

Printed by the Co-operative Power Press, Tanjore, Limited, Karuntattamkudi, Tanjore, and Published by Karanthai Kaviarasu R. Venkatachalam Pillai, Karanthai Tamil Sangam, Tanjore.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰அ } சித்திரபானு—கார்த்திகை 1942—நவம்பர் { மலர் அ

## பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

### பெரியநாயகியம்மை பிள்ளைத் தமிழ்.

நமது பொழில் ஐப்பசி இதழில் 'அன்புவிடுதூது' பற்றிய குறிப்புரை காணுமிடத்து, தூது. உலா, பிள்ளைத்தமிழ் முதலாய நூல் வகைகள், பழையன கழிதலாக ஒழியாமல், இன்றும் எழிலுற எழுவன வாதல் கண்டு மகிழ்ந்தோம். இவ்விதழிலும் அத்தகைய நூல் வெளி யீடொன்று கண்டு மகிழ்கின்றோம்.

உண்ணுட்டு மன்னர் ஆட்சிகளில் ஒன்றாகித் தமிழ் மன்னர் ஆட்சியில் நெடுங்காலமாகச் சிறப்புப் பெற்று வரும் புதுக்கோட்டை நாட்டில், மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்தும் கோயில் கொண்டருளும் திருக்கோகரணம் **பெரியநாயகியம்மையின் பிள்ளைத் தமிழ்**, தமிழ்த் தாயின் சிறந்த அணிகளில் ஒன்றாக வெளிவந்துளது.

இதனை ஆக்கியோர், முறையாகத் தமிழ்க் கல்வி பயின்று, சிறந்த பட்டங்களை எய்தி, உயரிய கல்லூரித் தமிழாசிரியராகித் தொண்டாற்றி வரும் திருவாளர். **கவிராச, பண்டித, நா. கனகராசய்யர் அவர்கள்**. இவர்கள், புலவர் போற்றும் சிறந்த கல்வி ஆய பொன்மலர், நாற்றம் பெற்று மிளிர்வ தெனக்கொண்ட உள்ளம் நிறைந்த கடவுட் பற்று சான்றவர். இந் நூலுட் காணும் 'வாரானைப் பருவத்தைப்' பார்த்து வருங்கால், அப்பகுதி, இப்புலவர் தம் உள்ளத்தே நின்று பெருவாழ்வளிக்கும் அம்மையாரை அகக்கண்ணாற் கண்டு மகிழ்தலோடமையாது தம் புறக்கண்ணாலும் கண்டு மகிழுமாறு, உண்ணின்று வெளியே வந்தருள அழைப்பது போன்றே தோன்றி மகிழ்வித்தது.

இந்நூல் அச்சாகி வெளி வரச் செய்த பெருந் தகையாளர், பலவான் குடி, சிவநேசச் செல்வர், உயர்திருவாளர், **ராம. கும. சு. குமரப்பசெட்டி யார் அவர்கள்**. இந்நூலின் முகவுரையிற் காணுமாறு, இத்தமிழ்ச்

செல்வர், சிவ புராணத் திருவகவல், பிரதோட விளக்கம், முதலிய நூல்களை வெளியிட்டதும், திருவாசகப் பதிப்பு வெளிவரல் முதலிய வற்றிற்கு உதவிபுரிய மனமுவந்ததும் முதலாய பற்பல சிறந்த தமிழ்த் தொண்டாற்றி வரும் பெருந்தகையாவர். நம் சங்கத்தே வெளியிட்ட தொல்காப்பியத் தெய்வச்சிலையார் உரை அச்சிட உதவிய பெருங்கொடை யாளராய இவர்கள் வள்ளன்மையினையும், தாய்மொழிப் பற்றினையும் நம் அன்பர்கட்கு எடுத்துரைப்பதும் வேண்டுவதாமோ !

இந்நூலை ஆக்கியோரும் வெளிவரச் செய்தோருமாகிய நம் அன்பர்கள் இருவரும் எந்நலமும் பெற்று நீடுவாழுமாறு அருள்புரிய அம்மையாரை வணங்கிப் போற்றுகின்றோம்.

---

### இளந்தமிழன்

புதுக்கோட்டைத் தனியரசு நாட்டினைச் சார்ந்த கோனுபட்டு நகரி லிருந்து ' இளந்தமிழன் ' எனப் பெயரியதோர் திங்கள் வெளியீடு காணப் பெற்றேம். அது முழுவதும் கையினுல் எழுதப்பெற்றுவரும் அருமை கண்டு வியப்புமிக்கேம். இதன் ஒளி 2. கதிர் 2. என்ற ஐப்பசிப் பகுதி இதுபோது வெளிவந்துளது.

இவ்வெளியீட்டில், வாழ்த்து, தெலுங்கினிடம் அன்பு-முதலிய பத் தொன்பது அரிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு கட்டுரை யும் சிறந்த அறிஞர்களால் எழுதப்பெற்ற அழகிய கட்டுரையாகும். செய்யுள், உரைநடை, ஓவியம், விடுகதை, நகைச்சுவைத்துணுக்குக்கள்-என்றிங்ஙனம் பலவகைப்பட்டனவாய அக்கட்டுரைகள், சிறுவர் முதல் புலவர் வரை எத்திறத்தோர்க்கும் மகிழ்வூட்டும் பொருள்கள் நிரம்பியன வாகவுள்ளன, பரிசுப் போட்டிகளும் இன்ன பிறவும் அமைந்துள்ளன. இளந்தமிழன் ஆண்டினுல் இளந்தமிழனே யன்றி, அறிவினுல் மிக முதிர்ந்த தமிழனுகவே காணப்பெறுகின்றுன். இத்தகைய உயரிய பொருள் வளத்தினனுகிய இளந்தமிழனை, செல்வமிக்க வணிக மக்களும் பிறரும் அச்சுத்தேர் ஏற்றி அழகு காணுமை என்னேயோ ! அறிதற்கில்லேம் ! இளந்தமிழன் மிகுவளனெய்தித் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் அகத்திலும் மேவி மகிழ்விக்குமாறு, தமிழ்ப் பெரியார்கள் அவனைப் போற்றி வளர்த்து வருவார்களாக. இளைஞர் ஒற்றுமைக் கழகத்தார் புரியும் அரிய தமிழ்த் தொண்டுகளில் இஃதொன்றுகும் என அறிகின்றோம்.

---

### அன்னை மலர்

### தமிழர்க்கு

**' தமிழர்க்கு '** என்னும் பெயரினதாய மிகச் சிறு நூல், மிக மிக அரிய பெரிய கருத்துக்களைக் கொண்டு, மிக அழகான தோற்றத்துடன் வெளி

வந்துளது. இது தமிழ்த் தாய் வாழ்த்து, தமிழின்பம் எனும் செய்யுட்களையும், அரிய கருத்துரைகளையும் முதற்கண் கொண்டு, வேண்டுதல் என்ற இடைநிற்கும் பகுதியில், பல இனிய வேண்டுதல்களைக்கொண்டு மிளிர்கின்றது. இப்பால், சிறந்த பெரியார் பலர் தமிழ்ச் சுவைபற்றிக் கூறிய பொன்னுரைகளைத் தொகுத்துக் கூறுவதுடன் வேற்றுமொழிச் சொல் பலவற்றிற்கு உரிய தமிழ்ச் சொற்களையும் நேர் நேரே எழுதிக் காட்டுகின்றது. இவ்வளவு சிறப்புக்களுடன் தோன்றும் இவ்வழகிய வெளியீட்டிற்கு, மூன்று பைசாவே விலை எனல் மிக்க வியப்பினைத் தருகின்றது. வெளியிட்டவர், தமிழன்னை நிலையத்தார், கோனுபட்டு.

---

### கந்தபுராணச் சுருக்கமும் தத்துவமும்

**பழநித் தண்டாயுதபாணி சுவாமி கோயில் நிலையத்தின் ஆட்சித் தலைவராய திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை** B. A., B. L. அவர்களையும், அந்நிலையச் சார்பான வேத சிவாகமப் பாடசாலைப் பேராசிரியர், **சிவத்திரு. ஈசான சிவாச்சாரிய அடிகளையும்** தமிழ் நாட்டில் அறியாதார் யாவருமிலர். அடிகளால் எழுதப்பெற்றதும், பிள்ளையவர்களால் வெளியிடப்பெற்றதுமாகிய இந்நூல், பன்னெடுங்காலம் பயின்று தெளியத்தகும் கந்தபுராணத்தின் வரலாற்றுப் பொருள், உட்பொருள்களைக் கல்வி பயிலும் மாணவர்களும் தெள்ளிதின் உணர, அழகு ததும்பச் சுருக்கிக் கூறுஞ் சிறப்பினதாகின்றது. இடையிடையே இனிய செய்யுட்களுடன் கூடிய இந்நூல், இனிய நடைநயம் வாய்ந்து மகிழ்விக்கின்றது. இந்நூல், தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் படித்துப் பயனுறத் தக்கது. இன்னனைய பல நூல்களை எழுதி வெளியிடும் அடிகளார்க்கும் திரு. பிள்ளையவர்களுக்கும் தமிழ் மக்கள் என்றென்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையராவர். இதனை யாவரும் எளிதிற் பெற்றுப் பயனுற, வெளியிட்டோர் இதன் விலையினை அணு ஒன்றேயாக்கியுள்ளார்கள். (10 படிகள் அணு எட்டு).

---

### விளம்பரக் குறிப்புகள்.

பின், புற அட்டையிற் காணும் சங்க வெளியீடுகளில் உள்ள நால்வர் நான்மணிமாலை, அவ்வெளியீட்டிலுள்ள ஏனைய நூல்களை வாங்குவோர்க்கு அனுப்பப்பெறுவது; தனித்து அனுப்புதற்கியலாதது.

'தமிழ்ப் பொழிலின் கையொப்பம்' என்பதிலுள்ள-உறுப்பினர்க்கு ரூ. 2—0—0, 2—8—0-என்பது, சங்க உறுப்பினராவர்க்கு, அச்சங்க உறுப்பினர் வரியுடன் சேர்த்துச் செலுத்தும் தொகையாகும். சங்க உறுப்பினர் வரி, குறைந்தது ரூ. 3—0—0 ஆகும். விண்ணப்பத்தாளில் விளக்கம் காணலாகும்.

## நன்கொடைகள்

### ஏழைமாணவர் நிதி

திரு. S. A. சாம்பசிவம்பிள்ளை அவர்கள்
அறுபதாண்டு நினைவுக் கொடை 5—0—0

,, A. வீரையாவாண்டையார் அவர்கள், பூண்டி
புலவர் மாணவர் உண்டிக்கு 2-ஆம் பகுதி வரவு 100—0—0

### தமிழவேள் நினைவு நிதி

திரு. அண்ணாமலை அவர்கள், விளாங்குடி 1—0—0

,, இர. பழனிச்சாமிப்பிள்ளை அவர்கள், விளாங்குடி 3—0—0

,, தி. இராதகிருட்டின நாயுடு அவர்கள், B. A. B. L., தஞ்சை
ரூ. 50-ல் முதல் பகுதி வரவு 5—0—0

,, A. V. பொன்னுச்சாமிபிள்ளை அவர்கள், கரந்தை 1—0—0

### புலவர் கல்லூரி

திரு. N. L. சின்னகிருட்டின நாயுடு அவர்கள், கரந்தை
ஆண்டுக்கொடை 50—0—0

,, N. L. வேங்கடசாமி நாயுடு அவர்கள், கரந்தை
ஆண்டுக்கொடை 35—0—0

,, N. A. வர்த்தமான முதலியார் அவர்கள், கரந்தை
ஆண்டுக்கொடை 2-ஆம் பகுதி 25—0—0

,, ஜினகுமாரமுதலியார் அவர்கள், கரந்தை 0—8—0

,, S. A. சாம்பசிவம்பிள்ளை அவர்கள், கரந்தை,
அறுபதாம் ஆண்டுக்கொடை 5—0—0

### சங்கம்

திரு. அ. குழந்தைவேல்பிள்ளை அவர்கள், கரந்தை 1—0—0

**திருத்தம்.**—சென்ற ஐப்பசி இதழில், புலவர் கல்லூரி என்ற தலைப்பில் உள்ள திரு. மதுரை, கிருட்டினக்கோன் என்பது, திரு. இ. மா. கோபாலகிருட்டினக்கோன் எனக் கொள்க.

# சார்லஸ் டார்வின்—(Charles Darwin)

(1809—1882)

திரு. த. பு. நவநீதகிருட்டினனார், விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௮, மலர் ௭, பக்கம் 219)

இங்ஙனம், இவர், இக் கொள்கையின்பாற்பட்ட பணிகளில் பத்தொன்பது ஆண்டுகள் ஈடுபட்டிருந்தனர். அக்காலத்தினுள் இவர் எண்ணற்ற ஆராய்ச்சிகள் செய்தனர்; மலைபோல் குவிந்த ஆராய்ச்சிப் பொருள்களைப் பெற்றார்; இவற்றினின்று சலித்தெடுத்து இறுதியில் கிடைத்த பொருள்களைத் தக்க வகைகளில் தொகுத்துப் பிணைத்து நூலாக்குதலில் ஈராண்டுகள் கழிந்தன. இந்நிலைமையில், மலேயா (Malaya) நாட்டில், ‘புலம் காண்’ முறையில் ஆராய்ச்சிகள் செய்துகொண்டிருந்த, வேலஸ் (Wallace) என்ற விஞ்ஞான அறிஞர், இவர் பார்வைக்கென ஒரு கட்டுரையை இவருக்கனுப்பினார். அக் கட்டுரையும் தன் நூல் நிலைநாட்டிய கொள்கையைப் பற்றினதாயிருந்ததைக் கண்டு, டார்வின் வியப்பும் கலக்கமும் அடைந்தார். அக் கட்டுரையை வாலஸின் பெயருடன் வெளியிட்டு விட்டு, தம் நூலை மறைத்துவிட எண்ணினார். ஆயினும், இவர் உற்ற நண்பரான லயலும் இன்னும் பலரும், டார்வின் தம்நூலை அழிக்காதவாறு தடுத்தனர். வாலஸின் கட்டுரையை முதலில் வெளியிட்டு, அக் கொள்கையை முதன் முதலில் கண்டுபிடித்த பெருமையை அவராக்கினபின், டார்வின் அக் கொள்கையை முற்றும் நிலைநாட்டுவதான தம் நூலை வெளியிடுதலே, அறநெறி யென்று, லயலும், ஹூக்கர் (Hooker) என்ற மற்றொரு விஞ்ஞான அறிஞரும் தம் கருத்தை யுரைத்தனர். டார்வின் அவர் கருத்திற்கியைந்து, அவ்வாறே செய்தார். லினியன் சங்கம் (Linnean Society) என்ற விஞ்ஞான அறிஞர் சங்கத்தினர் முன்னிலையில் முதலில் வாலஸ் எழுதின கட்டுரையும், அதன்பின் டார்வின் எழுதிய நூலினின்று சில பகுதிகளும் படிக்கப்பட்டன. அங்கிருந்த உறுப்பினர் அக் கொள்கையைப் பற்றி அறிவதில் மிக்க ஆர்வங்கொண்டனர். ஆயினும் புதுவகையான கருத்துக்களைக் கொண்ட அக் கொள்கையை அவர்கள் உடனே நன்குணர இயலாதவராயினர். லயலும் ஹூக்கரும் அக் கொள்கையின் மேன்மையை எடுத்துக்காட்டி அதைப் போற்றினர். பேரறிஞர்களான லயலும் ஹூக்கரும் போற்றியதொன்றை எதிர்க்க அஞ்சி, ஏனைய உறுப்பினர் அக் கொள்கையைப் பற்றிய தம் கருத்துக்களை வெளிப்படுத்தாதிருந்தனர். வாலஸ் தம் கட்டுரையை டார்வினுக்கு அனுப்பினதால் விஞ்ஞானம் பெரிதும் பயனடைந்தது எனலாம். ஏனெனின், இத் தூண்டுதலின்றி, டார்வின் தம் கொள்கையைப் பற்றின நூலைத் தம் காலத்திலேயே வெளியிட்டிரார். இவர் மேலும் மேலும் தக்க சான்றுகள்

பெறுவதிலேயும் அவற்றை ஆராய்வதிலுமேயே தம் கருத்தையூன்றி வாழ் நாளைக் கழித்திருப்பார். ஒருகால் அதை வெளியிட்டிருப்பினும், டார் வினின் அவாவுக் கேற்றவாறு வெளிப்பட்ட அந்நூலைப் பயின்று அது கூறிய கருத்துக்களைச் செவ்வனே யுணர்ந்து, அதன் நலங்களையும் குற்றங் களையும் எடுத்துரைக்கும் திறமையைப் பெற்ற அறிஞர் ஒருவர் அந்நூலைப் பயில்வதிலேயே தம் வாழ்நாட்களை முழுமையையும் கழிக்க வேண்டியிருந் திருக்கும். அவ்வாருன அறிஞர் ஏற்படுதல் அரிதானமையின், டார்வினின் நூல் ஒரு மறைநூலின் நிலைமையை யடைந்திருக்கும். வாலஸ் அனுப்பின கட்டுரை, இவரைத் தாம் திட்டம் போட்ட நூலின் சுருக்கத்தை, ஐந்நூறு பக்கங்கள் கொண்ட "சிறு" நூலாக வெளியிடச் செய்தது. அது மறை நூலாயின்றி, யாவரும் அறியக்கூடிய பொது நூலாய் அமைந்தது. இவ் வாறு வெளியிடப்பட்ட நூலின் தலைப்பு பின்வருமாருகும். இயற்கையின் தேர்தல் முறை வழியே தோன்றிய இனங்களின் உற்பத்தி அல்லது வாழ்க்கைப் போரில் தகுதியான சிற்றினங்கள் (Races) அழிவுருதிருத்தல் (On the origin of species by means of Natural Selection or the Preservation of Favoured Races in the Struggle for Life.) இத் தலைப்பு சுருக்கப்பட்டு, "இன உற்பத்திநூல்" என்றும் அதன்பின்' உற்பத்தி நூல்" என்றும் இப்பொழுது வழங்கிவருகின்றது.

புதிய கொள்கைகளைப் பற்றி எளிய நடையில் எழுதப்பட்ட இந் நூலை மக்கள் உடனே வாங்கிப் படிக்கலாயினர். வெளியிடப்பட்ட அந் நாளே முதற்பதிப்பு முற்றும் விற்கப்பட்டது. ஓராண்டிற்குள் இந்நூல் பல நாடுகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

புரட்சியியலான கொள்கையைக் கொண்டதென இந்நூல் கருதப் பட்டதால், 'உள்ளது சிறத்தல்' கொள்கையை எதிர்ப்போரும் ஏளனத் துள்ளாக்குவோருமான பலர் எழுந்தனர். கிறித்துவ சமயத்தின் அடிப் படையான கொள்கையை, 'உள்ளது சிறத்தல்' கொள்கை எதிர்த்த தென்றும், மக்களை குரங்குகளின் வழித்தோன்றல்கள் என்று இழிவு படுத்துகின்றதென்றும் இதனை எதிர்த்தோர் கூறி வந்தனர். ஆதலின் இத்தவருன கருத்துக்களைப் பற்றிச் சிறிது கூறிவிட்டு நாம் மேற் செல்ல லாம். 'உள்ளது சிறத்தல்' கொள்கை இப்பொழுதுள்ள பல வேறுபட்ட இனங்களும் பல்கோடி ஆண்டுகளுக்கு முன், ஒருவகையான உயிரியினின்று தோன்றினவையே யென்று உரைகின்றதேயன்றி, இப்பொழுதுள்ள ஓர் இனம், இப்பொழுதேயுள்ள மற்றோரினித்தினின்று தோன்றியது எனக் கூறவில்லை. மக்களுக்கும் குரங்குகளுக்கும் பொதுவான உடலமைப்புக் களும், பண்புகளும், இவ்விரு இனங்களுக்கும் மற்ற இனங்களுக்குமிடை யிருப்பவற்றைவிட அதிகமாயிருப்பதால், மக்களுக்கும் குரங்குகளுக்கும் பொதுவான இனம் தோன்றிய காலம், இவ்விரு இனங்களுக்கும் மற்ற வற்றினுக்கும் பொதுவான இனம் தோன்றிய காலத்தைவிட அண்மை

யானது என்றே 'உள்ளது சிறத்தல்' கொள்கை கூறுவதாகும். அதாவது, அடிப்படையான ஒரே வகையான உயிரிகள் உலகிலுள்ள பல பாகங்களுக்கும் பிரிந்து சென்றபோது, அவற்றைச் சூழ்ந்தனவற்றின் தன்மைகளிலிருந்த வேறுபாட்டால் பலவகைகளில் சிறத்தன. இவற்றினின்று, முற்கூறிய காரணத்தினுல் வேறுவகைகள் தோன்றலாயின. இவ்வாறு, ஒரு பொது இனத்தினின்று மாறுபட்டபல்வேறு இனங்கள் தோன்றுவதற்கு, பல கோடி ஆண்டுகள் செல்லும். ஓர் எடுத்துக்காட்டால் இதை விளக்கலாம். நாய்களும் ஓநாய்களும் பலவகைகளில் ஒத்துள்ளன. ஆதலின் அவையிரண்டிற்கும் பொதுவான இனம் சிறிதுகாலத்திற்குள் (சில நூருயிரம் ஆண்டுகள்) இருந்திருக்கவேண்டும். இவ்வினத்தினதான விலங்குகளில் சில நாடடைந்தன. சில காட்டிலேயே யிருந்தன. காட்டிலிருந்தவை காட்டு வாழ்க்கைக் கேற்றவாறு சிறத்து, இப்பொழுது நாம் காணும் ஓநாய் இனமாயின, நாடடைந்தவை, நாட்டு வாழ்க்கைக் கேற்றவாறு சிறத்து, நாயினமாயின. 'உள்ளது சிறத்தல்' என்றும் நடைபெறுவதால், இப்பொழுதுள்ள ஓநாய்களும் நாய்களும் தோன்றிய பொது இனம் மறைந்துவிட்டது. எனின் நாய் ஓநாயின் வழித் தோன்றலன்று. இவ்வாறே மக்களுக்கும் குரங்குகளுக்கும் பொதுவான மூதாதையான இனம் ஒன்றிருந்ததேயன்றி மக்கள் குரங்குகளின் வழித் தோன்றல்களன்று.

'உள்ளது சிறத்தல்' கொள்கை 'படைப்பு' என்ற கருத்தை எதிர்த்ததன்று. அடியுயிரி (Organism), எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றி அது இதுகாறும் எவ்வகையான கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. 'அடியுயிரி' யொன்று இருந்திருக்கவேண்டும் என்று மட்டுமே அது கூறுகின்றது. ஆனுல், அக் கொள்கை, கிறித்துவ சமயத்தின் முதல் நூலில் கூறப்பட்ட 'படைப்பி'ன் விவரத்தினின்று மாறுபட்டதாயுள்ளது அந் நூலில், ஏதோ ஒரு காலத்தில், இக்காலத்தில் நாம் இவ்வுலகில் காணும் உயிரினங்கள் யாவும் இப்பொழுதுள்ள தோற்றத்துடனேயே, ஒரு கடவுளால் தோற்றுவிக்கப்பட்டன என்றுள்ளது. காலத்திற்கேற்றவாறு இனங்கள் சிறத்துமாறும் எனும் கொள்கை அதை எதிர்த்ததேயாம்.

இனி, நாம் மேற் செல்வோம்.

அடிப்படையான சமயக்கொள்கையை எதிர்த்த 'உள்ளது சிறத்தல்' கொள்கை மக்களிடை பெரும் பரபரப்பையுண்டாக்கிற்று. அக்கொள்கையை ஏற்றவர், எதிர்த்தவர் என்ற இரு கட்சிகள் எழுந்தனர். அதையேற்றவர் 'நாத்திகர்' எனக் கருதப்பட்டனர். அக் கொள்கை நிலைநாட்டப்படுதற்கு ஏதுவான சான்றுகளை யொத்த சான்றுகளுடன் அதை எதிர்க்க இயலாமையின், அதை எதிர்த்தோர் அதை எள்ளி நகையாடி தம் கட்சியை நிலைநாட்ட முயன்றனர். அவ் வெதிர்ப்பையும் ஏளனத்தையும்

டார்வின் பொருட்படுத்தவில்லை. அப்போரில் டார்வின், ஹக்ஸ்லி (Huxley) என்ற இயற்கைநூல் பேரறிஞரின் துணையைப் பெற்றார். டார்வின் பெருத பல நலங்களை ஹக்ஸ்லி பெரிதும் பெற்றிருந்தார். அவர் ஆணித் தரமான சொற்களைக்கொண்டு, சொற்போரில் உடனுக்குடன் விடை யளிக்கும் ஆற்றலையும், ஆர்வத்துடன் சொற்போர் நிகழ்த்தும் வன்மை யையும் பெற்றவர். இன்னும், அவர் அறிவாற்றலுடன் நூன்முறையிலும் நன்கு பயின்றவர். ஹக்ஸ்லி 'உள்ளது சிறத்தல்' கொள்கையை முற்றும் ஏற்றவருமாவர். மக்கள் கூட்டங்களினின்று விலகி நின்றவரும், சொல் வன்மை வாய்க்காதவரும், உடல் நலிவுற்றவருமான டார்வினுக்கு அவர் உற்ற துணையாய் விளங்கினர். அக்கொள்கையைப் பற்றி நடைபெற்ற சொற்போர்களில், சமயத்தலைவர்களுடன் அவர் திறமையுடன் போராடி னர். ஒரமயம், ஹக்ஸ்லிக்கும், வில்பர் போர்ஸ் (Wilberforce) என்ற சமயத்தலைவருக்கும், அக்கொள்கையைப் பற்றின சொற்போர் நிகழ்ந்தது. வில்பர்போர்ஸ் சொல்வன்மை பெற்றவராயினும், தகர்க்க இயலாத சான்றுகளால் அரணுக்கப்பட்ட அக் கொள்கையை, நேர் முறையில் எதிர்க்க இயலாது, அதை ஏளனத்திற்குட்படுத்தி வெற்றி பெற எண்ணி, ஹக்ஸ்லியை நோக்கி "பேராசிரியர் ஹக்ஸ்லி யவர்களே, உங்கள் தாய் வழியோ, அன்றி தந்தை வழியோ தாம் குரங்கினின்றும் தோன்றினிர் ?" என்றார். ஹக்ஸ்லி தாமாற்றவேண்டிய எதிர் சொற்பொழிவை நிகழ்த்தி, தக்க சான்றுகளுடன் தம் கொள்கையை நிலைநாட்டியபின், பில்பர்போர்ஸ் கேட்ட வினவிற்குப் பின்வருமாறு விடையளித்தார். "பில்பர்போர்ஸ் பெரியாரே! குரங்கின் மரபில் தோன்றுவதை நான் நாணமுறும் இழி வெனக் கருதேன். ஆனல் தம் சொல் வன்மையையும், அறிவாற்றலையும், பொய்க்கும் புரட்டலுக்கும் தொண்டு செய்யும் நாணமுறுவகையில் பயன் படுத்துவோரின் வழித் தோன்றலாயிருத்தலையே இழிவெனக் கருதுவேன்."

'உள்ளது சிறத்தல்' கொள்கையைப் பற்றி முதன் முதலில் வெளி யிடப்பட்ட கட்டுரை வாலஸ் எழுதியதாயினும், அக் கொள்கை 'டார் வினின் கொள்கை' யென்றே வழங்கலாயிற்று. இதை, வாலஸ் சற்றேனும் பொருட்படுத்தவில்லை. அவர் அடக்கத்தில் டார்வினுக்குச் சற்றேனும் பின்வாங்கியவரன்று. அழுக்காறு கொண்டு, தன் பெயரே அக் கொள்கை யுடன் இணைக்கப்பட வேண்டும் என்று என்றும் வற்புறுத்தவில்லை. இன்னும், அக் கொள்கையை எல்லோரும் ஏற்கும் வண்ணம் தக்க சான்று களுடன் நிலைநாட்டி, அதன் பொருட்டு ஏளனத்தையும் எதிர்ப்பையும் பொருட்படுத்ாது, போர் புரிந்தவரின் பெயர் அதனுடன் இணைக்கப் படுதல் பொருத்தமானதே யென்றும், தற்செயலாய் அதைக் கண்ட தமக்கு அப்பெருமை உரித்தானதன்று என்றும் வாலஸ் கூறினர்.

டார்வினின் கொள்கையைப் பற்றின போர் முடிய நீண்டகால மாயிற்று. பின்னர், 'உள்ளது சிறத்தல்' கொள்கை எல்லோராலும்

ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், அது ஏற்படுவதற்கான 'இயற்கையின் தேர்தல் முறை'யைப்பற்றின கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவர் காலத்தே யிருந்த, 'லெமார்க்' (lamarck) என்ற ப்ரெஞ்சு (french) நாட்டு விஞ்ஞான அறிஞர், உள்ளது சிறத்தற்கு வேறொரு காரணத்தைக் காட்டினர். இன்னும் பலரும் பலவகையான காரணங்கள் காட்டினர். ஆயினும், இன்று வரை, இதைப்பற்றி யெல்லோரும் ஏற்றுக்கொண்ட கொள்கை யொன்றும் நிலை நாட்டப்படவில்லை. இதனிலும், டார்வின், தம்மைப் பின்பற்றுபவரைவிட தான் அடக்கமானவர் என்று காட்டினர். இவர் தம் நூலைப்பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார். "என் உற்பத்தி நூலில் பல பகுதிகள் சரியானவையன்று எனப் பிற்காலத்தினரால் தள்ளப்படலாம். ஆயினும், நான் காட்டிய பொதுக் கொள்கை, என்றும் நிலைக்கும் என்றே எதிர்பார்க்கிறேன்." இவர் கூறியவாறே பொதுக்கொள்கை என்றும் மறையாதவாறு, நிலைநாட்டப் பட்டுள்ளது. இப்பொழுது நாம், அக் கொள்கை, விஞ்ஞானத் துறையில் மட்டுமின்றி, எல்லாத் துறைகளிலும் விரவியுள்ளதைக் காண்கிறோம். உடைகள் சிறத்தல் முறையைப் பற்றியும், சட்டங்கள் சிறத்த வகைகளைப் பற்றியும், அரசியல் முறைகள்சிறத்த வரலாறுகளைப்பற்றியும், சடங்குகள் சிறத்தலைப் பற்றியும், இன்னோரன்ன பலவற்றைப் பற்றியும், அடிக்கடி நாம் குறிப்பிடுகிறோம். அக் கொள்கையை முதலில் எதிர்த்த சமயத்தினரே அதை ஏற்றுக்கொள்கின்றனர். சமயங்கள் சிறத்தலைப் பற்றியும், சமயக் கோட்பாடுகள் சிறத்தலைப் பற்றியும், சமய வழிபாடுகள் சிறத்தலைப் பற்றியும், சமய ஆட்சி முறைகள் சிறத்தலைப் பற்றியும் அவர்கள் பல நூல்கள் எழுதி வெளியிடுகின்றனர்.

டார்வின், தமது 'உற்பத்தி நூல்' தாம் வெளியிட எண்ணிய பெரும் நூலின் சுருக்கமே என்று கருதினர் என முன்னரே கூறியுள்ளோம். ஆதலின் இவர், அந்நூலின் பகுதிகளை விரித்துப் பல் வேறு நூல்களாக இதன்பின் வெளியிடலானர். 'உற்பத்தி நூல்' வெளியிடப்பட்ட ஒன்பது ஆண்டுகளின் பின் "வீடுகளில் வளர்க்கும் விலங்குகளிலும் பயிர்களிலும் தோன்றும் மாறுதல்கள்" (The Vaination of Animals and Plants ceude domestication) என்ற நூலை வெளியிட்டார். இவரது இரண்டாவது நூலும் 'உற்பத்தி நூல்' போன்றே பெருங்கலவரம் விளைவிக்கும் என்று எண்ணியவர் ஏமாற்றமடைந்தனர். அந்நூல் பல பொருள்களைப் பற்றிக் கூறும் பெரும் தொகுப்பு நூலாயிருந்ததே யன்றி, புரட்சியியலான எக் கொள்கையையும் பற்றிக் கூறவில்லை. அது, டார்வினின் பேருழைப்பிற்கும், ஆராய்ச்சித் திறனுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கிற்று. மூன்றுண்டுகளுக்குப்பின் 'மக்களின் கொடிவழித் தோற்றம்' (The Dexeut of Man) என்ற நூலை வெளியிட்டனர். உற்பத்தி நூலில் எல்லா இனங்களுக்கும் பொதுவானவற்றைப் பற்றிக் கூறினர். இதில் மக்களினத்தைப் பற்றிச் சிறப்பாய் விரிவான முறையில் எடுத்துரைத்தார். இந் நூலிலேயே

'இயற்கையின் தேர்தல்' மட்டுமன்றி மற்றொரு வகையான தேர்தலும் 'உள்ளது சிறத்தற்குக்' காரணமாகும் என்று காட்டினர். அது "பால்பாற்பட்ட தேர்தல்" (Sexual Selection) என்பதேயாம். அடுத்த ஆண்டு, "விலங்குகளினதும், மக்களினதும் ஆன உணர்ச்சிகளின் வெளியீடுகள்" (Expressions of Emotions in Men and Animals) என்ற நூலை வெளியிட்டனர். அதனில், உலகிலுள்ள எல்லாவகையான மக்களும், தம் உணர்ச்சிகளை ஒரே வகையான முக வேறுபாடுகளால் வெளிப்படுத்துகின்றனர் என்றும், விலங்குகள் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகைகளுக்கும், மக்கள் இவற்றையே வெளிப்படுத்தும் வகைகளுக்கும், இடையுள்ள இணைப்புக்களைப்பற்றியும் கூறியுள்ளார். இதன் பின், 1875-ஆம் ஆண்டு முதல் 1877-ஆம் ஆண்டு வரை, பயிர் நூல் பாற்பட்ட பல பொருள்களைப்பற்றின நூல்களை வெளியிட்டனர். அவை, 'ஏறு கொடிகள்' (Ascending Plants), 'புழுக்களை யுண்ணும் பயிர்கள்' (Insectivorous Plants), 'பிறபொடிக் கலவியும் தன் பொடிக் கலவியும்' (Cross and Self Fertilisation), 'மலர்களின் பல திற வடிவங்கள்' (Different forms of Flowers), 'பயிர்களின் இயக்கம்' (Movement in Plants) பூஞ்சாணம் உண்டாதல்' (Formation of Vegetable Moulds) எனும் தலைப்புக்களைக் கொண்டவையாம். இவை, ஒவ்வொன்றும், டார்வினின் பேருழைப்பையும் பொருட் சிறப்பையும் நன்கு உணர்த்துவனவாம்.

இதன்பின், டார்வின் உடல்நலம் பெரிதும் குன்றலாயிற்று. பல ஆண்டுகளுக்கு முன்னரே, இவர், விஞ்ஞானம் தவிர மற்ற வாழ்க்கைத் துறைகள் பொருத்தவரைத் தாம் ஓர் உலர்ந்த இலையைப் போல் பயனற்றவர் எனக் கூறினர். தம்மால் விஞ்ஞானத்திற்குச் சிறு பணியேனும் செய்ய இயன்றவரை, தம் பணியாற்றி வந்தார். இறுதியில், அப்பணியும் செய்ய இயலாது, 1882-ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ஆம் நாள், இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தனர். இவர் இறக்குமுன், தாம் உறைந்து உழைத்து வந்த ஊரின், மண்ணின் கீழ் தம் உடல் உறங்கவேண்டுமென்று கூறினர். ஆயினும், பொது மக்களும் அரசியலாரும் இவரது இறுதியான விருப்பத்திற்கு மாருக, ஏப்ரல் 26-ஆம் நாள், லண்டனிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் (Westminster) மடத்தில், விஞ்ஞானப் பேரறிஞரான நியூடனின் (Newton) உடல் உறங்கு மிடத்திற்கு அண்மையில் இவர் உடலையும் புதைத்தனர்.

டார்வின் அரச விஞ்ஞானச் சங்கத்தின் பதக்கத்தை (Medal of the Royal Society)யும், காப்ளி பதக்கத்தை ((Copley Medal)யும் பெற்ருர். கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தினர் இவருக்கு "மூதறிஞர்" (Doctor of Science) என்ற மேன்மைப் பட்டமும் அளித்தனர்.

டார்வின், தம் வாழ்நாள் முழுமையும் பிற மக்களுடன் கலவாது கழித்தனர். விஞ்ஞானியக் கூட்டங்களுக்கு சென்றுவர நோய்நிமித்தம்

இயலாதவராயினர். ஆதலின், இவர் காலத்தினர் பலர் இவரை நேர்முக மாய்க் கண்டதில்லை. இவருடைய படத்தினின்றும், இவரது புகழாலுமே பலர் இவரை அறிந்தனர். ஆயினும், இவ்வுலகில் தோன்றிய பெருமக்க ளில் இவரும் ஒருவரே யென்பதில் ஐயமில்லை. இவர் தனக்கென வாழாது, விஞ்ஞானத்திற்கென வாழ்ந்தார்; குறுகிய நோக்கங் கொண்ட சமயக் கொள்கைகளால் கட்டுண்டு கிடந்த மக்களுக்கு விடுதலை பெறும் வழியைக் காட்டிய பெரியார் ஆவார்; தனியே உறுதியுடன் நின்று, வன்மையான எதிரிகளுடன் போராடி வெற்றியடைந்தார்; நாணமற்ற மக்களின் ஏளனத்தையும் மூட மக்களின் வன்மொழிகளையும் பொருட்படுத்தாது, தாம் கண்ட நேர் வழியே சென்றார். பலரால் இகழப்பட்ட தம்கொள்கை எல்லோராலும் ஏத்தப்படுவதையும், பொதுமக்கள் உள்ளத்திலும் ஆழ்ந்து ஊன்றுவதையும், இவர் கண்டார். தம் வாழ்நாட்களிலேயே, பொய்மை தோல்வியுற்று, வாய்மை வெற்றிமாலை யணிதலைக்காணும் பெரும்பேற்றைப் பெற்ற இவர், உண்மை காணும் விஞ்ஞானமேத்தும் உரைசால் சிறப்பு வாய்ந்த உயர்ந்தோர் ஆவார்.

## உழைப்பால் உயர்ந்த ஒருவர்

டாக்டர், திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், M. A.,
விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

(முற்றொடர்ச்சி: துணர் ௰அ, மலர் சு, பக்கம் 193)

கூறவேண்டியதை மீண்டுங் காலையில் ஒருமுறை பார்த்துக் கொண்டார். கடவுளை வணங்கி, அவரது அருளைக்கோரிப் புறப்பட்டார். பிரசங்கம் புரியப்போகுமுன் எப்பொழுதும் அவர் கடவுளை இறைஞ்சாது செல்வதில்லை. பொருட்காட்சிச் சாலைக்குப் புக்கர் மற்றைப் பெரியா ரோடு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம் பிரசங்க மேடையை மூன்று மணிக்கப்பால் அடைந்தது. வெயிலின் கொடுமைக்கு இடையேயும் புழுக்கத்திற்கு இடையேயும் புறத்தே வேர்வையொடு புக்கர் மேடை மீது வந்து சேர்ந்தார். எள் விழ இடமிராமல் மக்கள் குழுமி யிருந்தனர். மண்டபம் பெரிதாயினும், போதாதிருந்தமையாற் பலர் வெளியே வேறு நின்றுகொண்டிருந்தனர். புக்கர் நுழைந்ததும் நீக்கி ரோவரெல்லாம் விண்பிளக்கும்படிக் கைதட்டி வரவேற்றார்கள். வெள்ளை யரும் அரைமனத்தொடு கைதட்டினர்கள்.

கவர்னர் புல்லக்கு (Bullock) என்பவரால் முதற்கண் பொருட்காட்சி திறந்து வைக்கப்பட்டது. அவர் பேசியபின் பெரியார் வேறு சிலரும் பேசினர். புக்கர் பேச எழுமுன், அவர் நீக்கிரோவருடைய துணிகர முயற்சி நாகரிகம் ஆகியவற்றின் பிரதிநிதி எனக் கவர்னரால் அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டார்.

புக்கர் எழுந்து தமது நன்றியைக் கூறி விரிவுரை ஆற்றினர். நீக்கிரோவரும் வெள்ளையரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதைக் குறித்து அரிய முறையிற் சொல் சில இயம்பினர். கைத்தொழில் வல்லானை இகழாது போற்றவேண்டும் எனப் பகர்ந்தார். செய்யுளியற்றுதலுக்கு உள்ள பெருமை நிலத்தை யுழுதலுக்கும் உண்டு என்றார். இசை நாடக அரங்கங்களில் ஒத்த இடம் பெற்றுக் காசைச் செலவிட உரிமை பெறுவதினுஞ் சிறப்பாக அவ்வேளையில் நீக்கிரோவர் தொழிற்சாலையில் தக்க கூலி கொடுக்கப் பெறுதற்கு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று விளம்பினர். பொருட்காட்சியில் வைத்துக் காட்டப்பெறும் பல் பொருட்டொகுதி பயக்கும் நன்மையினும் பெரிதாகச் சாதிபேதத்தை ஒழித்தலும் வருக்க விரோதத்தை அகற்றலும் நலம் பயக்கும் என நவின்றார்.

புக்கர் பேசி முடித்தவுடன் அவர் கையைக் குலுக்கிப் பலர் தத்தம் மகிழ்ச்சியைக் காட்டினர். கவர்னர் புல்லக்கு என்பவர்தாம் முதலில் அங்ஙனம் செய்தவர். அக்கட்டிட மூலை முடுக்குக்களிலெல்லாம் உவகையொலியே எழுந்தது. பற்பலர் வந்து வந்து புக்கரைப் போற்றினர். அவர் மேடையை விட்டு வெளியே செல்வது அருஞ் செயல் ஆகிவிட்டது. மறு நாட்காலை தசக்கிசிக்குப் புக்கர் புறப்பட்டார். அத்லாண்டா முதல் தசக்கிசி வரையுள்ள புகைவண்டி நிலையங்களில் எல்லாம் அவருடன் கைகுலுக்க ஆவலுடையவராய்ப் பலர் வந்து நின்றனர்.

ஐக்கிய மாகாணப் பத்திரிகைகளெல்லாம் அவரது பிரசங்கத்தை வெளியிட்டு, ஆசிரியப் பகுதிகளிற் போற்றி எழுதின. ஐக்கிய மாகாணத்தின் தலைவரே அத்தேசத்தின் அரசர் போன்றவர். அவரும் புக்கரது பிரசங்கத்தைப் படித்துப் பார்த்து, அதனைப்போற்றிப் புக்கருக்குக் கடிதம் எழுதினர். கிளீவுலண்டு (Mr. Cleveland) என்ற அத்தலைவரது நட்பை அது முதல் புக்கர் பெறுவாராயினர்.

பல பத்திரிகைகள் புக்கரைக் கட்டுரை வரைந்தருளுமாறு வேண்டின. பிரசங்கச் சபையார் பலர் புக்கரைப் பேசுமாறு அழைத்தனர். ஒரு பிரசங்கச்சபை புக்கருக்கு ஐம்பதினாயிரம் இடாலர் அளிப்பதாகச்சொல்லி, குறிப்பிட்டகாலம் அதனோடு இருந்து அவர் பிரசங்கங்கள் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. அவரது வாழ்க்கைத்தொண்டு தசக்கிசியிற்கே என உறுதிசெய்யப்பட்டுவிட்டதாகவும், அக்காலாசாலையின் முன்

னேற்றத்திற்காகவும் நீக்கிரோ வருக்கத்தாரின் முன்னேற்றத்திற்காகவுமே தாம் பேசும்போதெல்லாம் பேசுவது என்ற கருத்துக் கொண்டிருப்பதாகவும், அவரது பிரசங்கத்திற்கு வாணிக மதிப்பு மாத்திரம் வைக்கும் ஒப்பந்தம் எதற்குந் தாம் கட்டுப்பட முடியாது என்றுந் தெரிவித்துவிட்டார்.

*1897*-ஆம் வருஷத்தில், புக்கரை மற்றொரு மாபெருங் கூட்டத்திற் பேசுமாறு அழைத்தார்கள். அக்கூட்டம் பாசிதனில் நடந்தது. இராபருட்டு கௌலிடுசா (Robert Gould Shaw) என்ற பெரியார் ஒருவர் தமது நாட்டிற்காகப் போரில் உயிரை விட்டதைப் போற்றி நினைப்பதின் அறிகுறியாகத் தூண் ஒன்று நாட்டப்பட்டது. அவ்வேளையிற் பேசவேண்டுமென்றே புக்கர் அழைக்கப்பட்டிருந்தார். கவர்னர் வாற்காட்டு (Wolcott) என்பாரே தலைமை தாங்கிப் புக்கரது பிரசங்கத்தைப் பாராட்டினார். அதனைக் கேட்ட மக்கள்தம் மெய்ப்பாட்டை ஏட்டில் எழுத ஒண்ணுது. புக்கரது பிரசங்கவன்மையின் அறிகுறி அது என்று சொல்லி அமைதலே அழகு.

பின்னரும், பேனியர் அமெரிக்கர் போர் முடிந்தபின் நடந்த சமாதானக் கொண்டாட்டங்களுள் ஒன்றில், சிக்காக்கோ என்ற நகரிற் பேசுமாறு புக்கர் அழைக்கப்பட்டார். அம்மாநாட்டில் அவர் பிரசங்கத்தைக் கேட்ட மக்கள் முப்பதினுயிரவர் இருப்பார். ஐக்கிய மாகாணத் தலைவர் வில்லியம் மெக்கிண்டிலி (Mr. William McKingley) என்பார் தமது அமைச்சரொடு அங்கு வந்திருந்தார். பிறதேசத்து அமைச்சருட் சிலரும், கப்பற்படைப் பணியாளர் பலரும் அங்கு வந்திருந்தனர். அங்கும் புக்கர் செய்த பிரசங்கம் போற்றப்பட்டது. அவர் சொற்பொழிவாற்றி வீடு திரும்பிய பிறகு, மறுநாட்காலை, அவரை நாடிவந்து அவருடன் பேச விரும்பினர் பலரென்றால், அவரது சொல் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டமை ஒருவாறு புலப்படும்.

புக்கர் எப்பொழுது பேசினுலும், தாம் தசக்கிசியிற் செய்து வரும் வேலையின் சிறப்பை உரைத்து அதற்கு ஆதரவு தேடுவார். அவருடைய சொற்பொழிவுகள் எல்லாவற்றிலும் உயிர் இருந்தது. அப்பொழுதைக் கப்பொழுது தம்முன் உள்ள சபையாருக்குத் தகுந்த முறையில் பேசும் பெற்றி அவரிடத்து நன்கு அமைந்திருந்தது. கதை சொல்ல வேண்டிய வேளையிற் கதைசொல்லியும், பொருள் கூறவேண்டிய இடத்திற் பொருளை விளக்கமாக அறிவித்தும் வந்தமையால், புக்கருடைய சொற்பொழிவுகள் பாராட்டப்பட்டன. உண்மை யென்று உணராதவற்றை அவர் கூறுவதில்லை. உண்மையை, அஞ்சா நெஞ்சொடு அறைவர். இடர்ப்பாடு மிக்க இடங்களிற் சொற்களைத் தேர்ந்து ஆளுந்திறன் அவருக்கு வாய்ந்திருந்தது. இக்காரணங்களாலும் அவருடைய சொல்வன்மை யாண்டும் போற்றப்பட்டது.

## 7. வாழ்க்கையின் பிற்பகுதி.

முற்பகுதியிற் கூறப்பட்டபடி பல இடங்களுக்குச் சென்று பிரசங்கம் புரிய அவரது வேலையினிடையே எப்படி இயன்றது என்று புக்கரைப் பலர் கேட்டதுண்டு. அவர் "உன்னால் செய்ய முடிவதைப் பிறரைக் கொண்டு செய்துகொள்ளாதே" என்ற பழமொழியைப் புறக்கணித்து, "பிறரும் உன்போலச் செய்யக்கூடியதை நீ செய்யாதே" என்பதைக் கருத்திற்கொண்டு ஒழுகினர். தசக்கிசிக் கலாசாலையின் வேலை ஒருவர் உண்மையைப் பொறுத்ததாக அமைக்கப்படவில்லை. ஒருவர் உள்ளாரோ இல்லையோ, நடைபெற வேண்டிய அனைத்தும் நடைபெற்றுவிடக்கூடிய முறையில் அமைக்கப்பட்டிருந்தன. ஆசிரியருங் குமாஸ்தாக்களும் கலா சாலையின் நிர்வாகத்திற் பங்கெடுத்துக்கொண்டு ஒழுங்குபட நடந்து வந்தமையால், கலாசாலையாகிய இயந்திரம் கடிகாரம் ஓடுவதைப்போல் இயங்கிக் கொண்டிருந்தது. ஆசிரியரிற் பெரும்பாலார் கலாசாலையில் மிக்க பற்றுடையவராயிருந்தனர். புக்கர் இல்லாத வேளையில், வாரன் இலாகன் என்ற பண்டாரத்தாரே பிரிஞ்சிபால் வேலையைப்பார்ப்பார். 1893-ஆம் ஆண்டில் புக்கரால் மணந்து கொள்ளப்பட்ட மாருகரெட்டு சேமசு (Margaret James) என்ற உபாத்தியாயினி, புக்கர் இல்லாத வேளை களில் வாரன் இலாகன் செய்யுங் கடமைகளுக்கு நல்லுதவியாய் இருப்பார். எம்மெடு சகாட்டு (Emmett Scott) என்ற காரியதரிசி புக்கர் செல்லும் ஊர் யாண்டிருப்பினும் அவ்வூரில் இருந்தபடியே தசக்கிசியில் நடக்குஞ் செய்திகளின் விவரங்களையெல்லாம் புக்கர் அறிந்து கொள்ளுமாறு அறிக்கைகள் அனுப்புவார்.

கலாசாலையின் ஒன்பது பகுதிகளின் தலைவர்கள் ஒன்பது பேர்களும் வாரம் இருமுறை கூடி நிர்வாகத்தைப்பற்றி எண்ணுவர். அறுவர் உறுப் பினராயுள்ள பொருளாதார வாரியத்தார் வாரம் ஒருமுறை கூடி அவ்வவ் வாரத்தின் செலவுகளை அறுதியிடுவர். மாதம் ஒரு முறைக்குக் குறையா மல் ஆசிரியர்கள் அனைவருங்கூடி ஆலோசிப்பதுண்டு.

புக்கர் நாடோறும் தாம் முடிக்கவேண்டிய கடிதப்பொறுப்பையும் மற்றவற்றையும் அலுவலறையை விட்டுப் புறப்படுமுன் முடித்துவிட்டே செல்வார். அன்றன்றைய பாடு அன்றன்றே நிகழ்வது எத்துணைச் சிறப் புடைத்து! அவர் வேலைக்கு அடிமையாகாது வேலையை ஆளுந் திறமுடை யர் ஆனர். அதற்குக் காரணம், அவருக்கு அவரது வேலையின்பால் இருந்த அன்பே.

காலையில் அவர் வேலையைத் தொடங்கும்பொழுது, கலாசாலையில் எல்லாம் இனிது முடியுமென்று நினைத்துத் தொடங்குவதுண்டு. ஆனல்

எதிர்பாராத இடுக்கண்ணால் இன்பமின்றிப் போகவுங் கூடும் என்றும், அவர் இடையிடையே எண்ணுவார். கலாசாலையில் எங்கேனுந் தீப் பிடிக்கவுங்கூடும், ஏதேனும் புகைந்து போகவுங்கூடும், யாரேனும் தம்மைத் திட்டவுந் திட்டுவர் என்றெல்லாம் நினைப்பது அவர் இயல்பு ஆகவின்,

" இன்பம் விழையான் இடும்பையியல் பென்பான்
துன்பம் உறுத லிலன் "

என்றதற்கேற்ப அவர் கழி பெருந்துன்பமுற்றாரல்லர். மிகப் பெரியதொரு செய்தியைக் குறித்து முடிவு பண்ணவேண்டுமானால், அவர் அதனைச் சிந்தையில் வைத்து ஓரிரவு உறங்கி ஏதேனும் வழி தெரிகிறதா எனப் பார்ப்பார், அன்றேல், மனைவியொடும் நண்பரொடும் கலந்து சூழ்ந்தபின், முடிவு செய்வார்.

அவருக்குப் புத்தகங்கள் படிப்பதில் மிக்க விருப்பம் உண்டு. ஆனால், பொருளொடு புணராப் பொய்மொழியை எடுத்துப் பார்ப்பதில்லை. செய்தித்தாள்களும் பெரியாருடைய வரலாறுகளுமே அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. ஆப்பிரகாம் இலிங்கனைப் பற்றிய புத்தகங்களையுந் துணுக்குகளையுங் கட்டுரைகளையும் அவர் படித்திருந்தார் என அறிகின்றோம். பெரும்பாலான புத்தகங்களை அவர் புகைவண்டிகளிலேயே படித்தார் எனவும் அறிகின்றோம்.

அவருக்கு ஓய்வுபோன்றதும் பொழுதுபோக்காய் உள்ளதும் அவரது தோட்டவேலையே. நிலத்தை அகழ்வதிலும், விதைகளை நடுவதிலும், பயிர்களைச் சுற்றிக் கொத்துவதிலும் அவர் நாடோறும் அரைமணியாவது கழிக்க விரும்புவர். இயற்கையைக் கண்டு மகிழ்ந்து, அதிலிருந்து ஊக்கமும் உரனும் பெறமாட்டாத மக்களுக்காக அவர் இரங்குவதுண்டு. காற்பந்து கைப்பந்து முதலான விளையாட்டுகளை அவர் வேட்டதில்லை. சீட்டாட்டத்தில் அவர் கறுப்பு சிகப்பு அறியார். தம்முடைய புத்திரர் இருவரொடும் எப்பொழுதாவது கோலியாட்டம் மாத்திரம் ஆடுவார். எல்லாவற்றினும் உயர்ந்த வகையில் அவருக்கு ஓய்வும் பொழுது போக்கும் அளித்தது அவர் இல்லத்தாருடன் அமர்ந்து அளவளாவும் மாலைநேரமே.

அவருடைய மனைவி மக்களெல்லாம் மாண்புடையவரே. மூன்றும் மனைவியாகிய மாருகரெட்டு அம்மையார் பிசுக்கு (Fisk)ப் பல்கலைக் கழகத் திற் பட்டம் பெற்றவர். திருமணத்திற்குப் பல்லாண்டு முன்பே தசக்கிசி யில் உபாத்தியாயனியாக வந்து அமர்ந்து திருமணக் காலத்தில் இலேடி பிரிஞ்சிபாலாக இருந்தவர். புக்கருக்குக் கலாசாலை வேலைகளிற் பேருதவி யாளராய் இருந்தவர். தசக்கிசிப் பட்டணத்தில் தாய்மார் கூட்டங்கள் கூட்டியும், அதன் அருகே எட்டுமைல் தூரத்திலிருந்த ஒரு கூட்டத்

தாருக்கு உழவுத் தொழில் கற்பித்தும் வந்தார் அவ்வம்மையார். கலா சாலையில், மகளிர் சங்கமொன்று ஏற்படுத்தி, மாதம் இருமுறை மகளி ரெல்லாம் கூடிச் சிறந்த பொருள்களைக் குறித்து ஆலோசிக்க ஏற்பாடு செய்து வந்தார்.

போர்சியா என்ற மகளார் உடை செய்வதில் நல்ல பயிற்சி பெற்று, இசைக் கருவி வல்லுநராகித் தசக்கிசியில் உபாத்திமைத் தொழிலை மேற் கொண்டார். பேக்கர் தெலியபெரோ (Baker Taliaferro) என்ற மூத்த மகன் சிற்ப வேலையில் தேர்ச்சியுற்றான். எருநெட்டு தேவிசன் (Ernest Davidson) என்ற கடைசிப் புத்திரன் பள்ளிக்கூடத்தில் புத்தகக் கல்வியும் கைத்தொழிற் கல்வியும் பெற்றுக்கொண்டு வந்ததோடமையாது, நாடோ றுஞ் சிறிதுகாலம் பள்ளிக்கூட வைத்தியரோடு இருந்து வைத்தியத் தொழிலையும் கற்றுவந்ததாக அறிகின்றோம். எனவே, புக்கருடைய மனைவி மக்களெல்லாம் புக்கரது வேலையில் ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொரு பங்கு எடுத்துக்கொண்டனர் என்பது புலனும்.

*1899*-ஆம் ஆண்டில் புக்கருக்கு வியப்பினை விளைத்த செயலொன்று நிகழ்ந்தது. பாசிதன் என்ற ஊரிலிருந்து சிலர் ஏற்பாடுசெய்து முடித்துக் கொண்டு புக்கரை அவரது உடனலத்தின் பொருட்டு ஐரோப்பாவிற்குச் சென்று ஓய்வெடுத்து வருமாறு வற்புறுத்தி வேண்டினர். பாசிதனில் ஒரு கூட்டத்தில் அவர் பேசியபொழுது மிக்க தளர்ச்சியுற்றிருந்தார் எனக் கண்டு, சில பெண்மணிகளும் கேரிசன் (Mr. Garrison) என்பாருஞ் சேர்ந்து பணந் திரட்டி அவரை ஐரோப்பாவிற்குச் சென்று வருமாறு வேண்டிக் கொண்டனர். வேண்டியதோடு நிறுத்தாமல், அவசியம் போய் வரவேண்டுமெனச் சொல்லிக் கப்பலில் இடமுந் திட்டஞ் செய்து விட்டார்கள். தாமில்லாவிட்டால் தசக்கிசியில் ஒருகால் பணமுடை ஏற்பட்டால் என் செய்வார்கள் எனப் புக்கர் நினைத்தார். ஆனல் இக்கிஞ்சன் (Higginson) முதலான சிலர் புக்கர் வரும் வரையில், தசக்கிசிச் செலவுக்கு வேண்டிய பணத்தைச் சேகரித்துவிட்டார்களெனப் புக்கர் அறிவிக்கப்பட்டபின் அவர் தப்ப வழியில்லை.

(தொடரும்.)

# பண்டைத் திருமணம்

திரு. கோ. சி. பெரியசாமிப்புலவர், தமிழாசிரியர், புலவர் கல்லூரி, க. த. சங்கம்.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௮, மலர் ௭, பக்கம் 232)

மேற்கூறிய அகவின்பம், அறத்தின் வழாமலும், பொருளின் வழாமலும், இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டுமென்பார் "இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக்கூட்டம்" என வலியுறுத்தி யெழுதினார். நயனும் நண்பும் நாணும் பயனும் பண்பும் பாடறிந்தொழுகலுமாகிய பண்புடைய மக்களே அன்பொடு புணர்ந்த ஐந்திணை யொழுக்கத்தினை மேற்கொண்டொழுக வல்லாராய் மேலும் மேலும் இன்பினைப் பெருக்கி ஏற்றங் காண்பார். அடியோரும் பிறர்க்குக் குற்றேவல் செய்வோரும் நாணுக் குறைபாடுடையராகலானும் குறிப்பறியாது வேட்கைவழியே சாரக்கருதுவாராகலானும், இன்பம் இனிது நடாத்துவார் பிறர் ஏவல் செய்யாதார் என்பதனானும், அத்தகைய அடியோரையும் குற்றேவல் மக்களையும், இவ்வகவொழுக்கத்தினின்றும் நீக்கி, அவ்வந்நிலமக்களும் தலைமக்களுமே இவ்வகவொழுக்கங் கொண்டு திகழ்வரென வகுத்துரைத்தனர். இங்ஙனம் வரலாற்று நான் முறைக் கேற்பப் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர் எழுதியமைத்தமை அவர் அறிவின் மாட்சியை வெளிப்படுத்துகின்றது. இவ்வகவொழுக்கம் சுவைபடவருவனவெல்லாம் ஒரு தலைவன் தலைவிமாட்டு நிகழ்ந்தனவாக நிகழ்ந்தவற்றைத் தொகுத்துக்கூறும் பெற்றியதாகலின் ஆசிரியர் இதனை அகம் நாடு வழக்கம் என்றார். அஃதாவது செல்வத்தானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினானும், ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித்தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரும் அடுப்போரும் இன்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கணவகையான் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகி மெய்ப்பாடு தோன்ற வருவனவெல்லாம் ஒருங்கு நிகழ்ந்தன வாகப் பட்டாங்கு நிகழ்ந்தன கூறுதலாம். இங்ஙனம் தலைவனும் தலைவியும் உள்ளம் ஒருமையுற்றுக் கலந்த அகவொழுக்கம் உளம் நாடிய அக வொழுக்கம் என்பார், அகத்திணையியலுள் வரும் நூற்பாவில் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலனெறி வழக்கம்" என்றார். ஒருவர் உளத்தினை ஒருவர் ஆராய்ந்து கலந்த அன்பினைந்திணை ஒழுக்கமே புலனெறி வழக்கத்திற் குரியவென்றும் ஏனைக் கைக்கிளையும் பெருந்திணை ஒழுக்கமும் பெரும்பான்மையும், உலகியல் பற்றிய புலனெறிவழக்காய்ச் சிறுபான்மை வருமென்றும், யாம் அறிதற்கே சிறப்புடைய அகம் நாடு வழக்கினை முன்னிறுத்திச் சிறப்பில்லா உலகியல் வழக்கினைப்பின்னிறுத்தி உரைத்தருளினார், எனவே "நாடக வழக்கு" என்ற சொற்றொடர் "தொழுதெழுவார்" என்பதனை எழுந்து தொழு

வார் என்று பொருள் கொண்டாற்போலப் பொருள்கொள்ளும் முறையில் முன்பின் மாறிக் கிடந்த சொற்ருெடரென்று உணரற்பாலதாம். இங்ஙனம் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றினும் சொற்கள் மாறிக்கிடந்தமை யை அறிந்து உரைகாரர்கள் இயைத்துரைக்குமாற்ருல் யாம் இதனை நன்கு அறியலாம். இதுகருதியே ஆசிரியர் சொற்கள் சென்றியைந்து பொருள் தரும் முறையினை "நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்றவை நான்கென்பமொழி புணரியல்பே" என வகுத்துரைத்தனர். இப்பொருள் கோளுள் அடங்காமல் புதுமைப் புலவர்களால் வேறுவகையாகச் செய்யுள் யாக்கப் பெறினும் அவையும் பொருள் கொள்ளும் முறையிலடங்க "அகன்று பொருள் கிடைப்பினும் அணுகிய நிலையினும், இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என மேலும் சொற்களைப் பிரித்து மாட்டிப் பொருள் கொள்ளும் முறை யையும் விளக்கியருளினுர். எனவே நாடக வழக்கு என்ற சொற்ருெடர்க்கு அகம் நாடிய (உளம் ஆய்ந்து கலந்த) அக வழக்கு எனப் பொருள் கொள்ளலே ஏற்புடைத்தாம். ஒருவர் அகத்தை ஒருவர் ஆராயாது கலந் தனராயின் அவ்வொழுக்கம் அன்பினைந்திணை ஒழுக்கமாய்ப் புலவரால் சிறப்பித்துரைக்கப்படாதொழிதலோடு, ஆராயாது கலந்த மக்கள் தலை மகன் தலைமகள் என்ற சிறப்பிற்குரியராகாமல் அவரும் இழித்திடப் படுவாரென்க. அகம் நாடிய வொழுக்கம் என்றலே தமிழ் மக்களுக்குச் சிறப்பளிக்கும் பொருளாம். இவ்வாறு ஒருவர் உளநிலையை ஒருவர் ஆராய்ந்து மணந்து கொள்ளுதலே சாலச் சிறந்ததாக நம் பெரியோர்கள் எத்துணையோ ஆயிரம் ஆண்டுகட்குமுன் மொழிந்து வைத்த வழக்கத் தினையே இக்கால மேல்நாட்டினரும் பின்பற்றி ஒழுகுகின்றனரெனின் யாம் பெருமிதம் கொள்ளல் வேண்டாமோ? தமிழாசிரியர்கள் கூறிய அக வொழுக்கம் ஒருபுடைச் சேறலாகவேனும் மேலைநாட்டில் வழங்கிவர நம் நாட்டில் பெரும்பாலும் வழக்கிழந்தமைக்கு யாம் வருந்தல் வேண்டாமோ? இனி, நாடு என்ற சொல்லை வினைத்தொகையாக்கி நாடிய அகம், நாடும் அகம் என இன்பத்தோடு இயைபு படுத்தி முக்காலத்தும் எக்காலத்தும் நாடு அக வழக்காய்ப் புலவரால் புனைந்துரைக்கப்படும்—நாடும் இன்பம் எனினும் இழுக்காகாதன்ரே? எல்லோரும் நாடும்படியான இன்பத்தினை உணர்த்தும் தமிழை இதனுனன்ரே நம் முன்னோர் நாடகத்தமிழ் என்ற னர். இயல், இசை, என்ற தூய தமிழ்ச் சொற்களோடு நாடகம் என்ற தூய தமிழ்ச் சொல்லால் குறிக்கப்பெறும் தமிழ்ப்பிரிவு நம் தமிழ் மொழிக்கே உரிமைச் சிறப்புடைய சொற்களானமைந்ததன்ரே?

இவ்வக வொழுக்கம் தமிழகம் எங்கணும் நீக்கமற நிறைந்து வழங்கி வந்தமையாலேயே பொருள் வகைகளுள் ஒன்ருகத் தமிழாசிரியர்கள் அகப் பொருளைப் பகுத்துக் கூறினர். இவ்வகப்பொருள்பற்றி யெழுந்த இலக்கியு செய்யுட்கள் தாம் அருநிதியென்ன நமக்கு எய்ப்பில் வைப்பாய் இலங்கு

கின்றன. இத்துணை அகப்பொருள், புறப்பொருள் செய்யுட்களையும், இவ்விருவகைக்குரிய இலக்கண நூல்களையும், பெற்றுத் தலைமை சான்ற நாகரிக மக்களாய் எத்துணையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்குமுன் திகழ்ந்த நம் முன்னோரின் சீர்மையை என்னென்றுரைப்பேம்! அவர்களின் வழித்தோன்றல்கள் என எண்ணின் நமக்கு ஊக்கமும் பெருமிதமும், உடனுறுகின்றனவன்றோ? அவர் சீர்த்திவாழ்க. தமிழர் கொண்டகளவு, கற்பு என்னும் இருவகை கைகோளுள் முதலில் தமிழகம் எங்கணும் களவொழுக்கம் நிகழ்ந்தே, பின் கற்பொழுக்கம் நிகழ்ந்ததென்பதனை அறிவுறுத்தற்குத் தொல்காப்பியர் களவியலை முதலில் நிறுத்திப் பின் கற்பியலைக் கூறுவாராயினர். இறையனாரும் "முற்படப் புணராத சொல்லின்மையின் கற்பெனப்படுவது களவின் வழித்தே" என்று தொல்காப்பியர் கருத்திற்கு முரண் செய்யாமல் அரண் செய்வாராயினர். மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும் இவை முதலாகிய இயல் நெறி திரியாது மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும் பிரிவொடும் புணர்ந்தது கற்பாகையான் இக்கற்பின் செய்தி முன்னரும் விளக்கப்பெற்றது. களவிற் கூற்றிற்குரியார் இவர் எனவும், கற்பிற் கூற்றிற்குரியார் இவரெனவும், இருவகை கைகோளினும் நிகழ்ந்தவற்றை வெளிப்படையாகக் கூறப்பெறாதார் இவர் எனவும், நற்றாய் கூற்றிற் குரியதோர் மரபும், கண்டோர் கூற்று நிகழும் இடமும், தலைவற்குரியதோர் மரபும், தலைமக்கள் ஒழிந்த ஏனையோர்க் குரியதோர் மரபும் ஆகிய செய்திகளை யெல்லாம் நம் தொல்காப்பியனார் விரித்து உணர்த்தும் முறையை ஆராயின் எத்துணையோ உயர்ந்தவரம்போடு மிக மேலான நிலைமையில் இவ்வொழுக்கங்கள் அக்காலத்து நிகழ்ந்துள்ளன வென்பதையறியலாம்.

இங்ஙனம் அன்புடன் புணர்ந்த தலைவனும் தலைவியும் இல்லறக் கடமை பூண்டு வேளாண் வாழ்க்கை நிகழ்த்தும் பொழுது தன்னுடைய நன்மையும் மன்னன் நன்மையும் நாட்டின் நன்மையும் சுட்டிய கடமை வந்துற்றால், இவ்வின்பமே பெரிதென்று தன் கடமையை மறந்து ஆள்வினை மழுங்க அவன் இல்லிருந்து மகிழான். "நாளும் நாளும் ஆள்வினை மழுங்க இல்லிருந்து மகிழ்வோர்க்கில்லையாற் புகழ்" என்று தன் தலைவிக்கு ஆறுதல் கூறி வற்புறுத்தி இல்லிருக்கச் செய்து பிரிந்து சென்று தன் கடனாற்றி மீளுவான். இங்ஙனம் பிரிந்து சேறல் கடல்வழியாகக் கலத்திற் செல்லுதலும் நிலவழியாகக் காலிற் சேறலும், அக்காலத்தில் நிகழ்ந்துள்ளன. கடல்வழியாகச் சென்று கருதிய வினைமுடித்து மீண்ட மக்கள் இக்காலத்துக் கடல்வழியாகக் கலஞ் செலுத்துதலை அறியாராய்க்கிடத்தல் வியப்பிற்குரியதொன்றன்றோ! இவை தாமோ! தமிழ் மக்களுடைய சிற்பத்தொழிலின் திறனும், ஓவியத்தொழிலின் வன்மையும், கிழியினும் கிடையினும் தொழில் பல பெருக்கிய மேதகவும் பாலாவியென்ன பட்டினும் பஞ்சினும் உடைநெய்யும் உயர்வும் ஒழிந்தனவன்றோ! மணமுறை ஒன்றிலா யாம் மாறுதல் அடைந்தோம் மற்றெல்லாத் துறையிலும்



மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

மாற்றப்பட்டோம், ஏமாற்றப்பட்டோமன்றோ? இங்ஙனம் மாறுபாடுற்ற தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பண்டைச் சிறப்பினை எடுத்துக்கூறி எழுமின்! விழிமின்! எழுச்சியுறுமின்! நம்பண்டைப்பெருமையை எண்ணுமின் எனத்தெருட்டுதற் பொருட்டே நம்முன்னோர் கொண்டொழுகிய திருமணத்தியலினை இத்துணையும் விரித்துக்கூறினேம். இங்ஙனம் பண்டைக் காலத்து மரபு நிலையை வகுத்துனர்த்தினேமாயினும் இக்காலத்துப்புதியன புகுதலாக வழங்கிவரும் நன்மையமைந்த பழக்க வழக்கங்களை அறவே வெறுக்கின்றோமில்லை. இக்காலத்துப் புதியன புகுத்தலாகச் சில போலிக் கொள்கைகள் தமிழரிடையே புகுந்து அவர் தம் நாகரிகம், மொழி, கலை, தொன்மையின் விழுப்பம் யாவற்றையும் சிதைத்து அழித்து வருகின்ற செயலைக்கண்டு வருந்தி, இங்ஙனம் புகுத்தப்பட்ட புதிய தீய கேடுகளை அறவே ஒழிக்காவிடின், எதிர்காலத்தில் தமிழர் என்ற ஒரு மரபார் இருந்தனர்; அவருக்கெனத் தனிக்கலை, நாகரிகம், மொழி முதலியன ஒரு காலத்திருந்தன; அத்தமிழர் அவர்தம் மடியால் அவையாவற்றையும் இழந்தனர் என, இறந்த காலத்தால் எதிர்கால வரலாற்றாசிரியர்கள் எழுதியமைக்க இடந்தரலாகாது, நம்கலை, நாகரிகம், மொழி இவையிற்றின் தனிப்பண்பு கெடாமல் காப்பாற்றுவான் வேண்டி விழித்தெழுந்து வீறுடைய செயலாற்றி நம் வெற்றியை உலகம் கொண்டாடுமாறு செய்ய வேண்டும் என்னும் விழுமிய கருத்தினாலேயே இம்மணத்தியல்பு விரித்துக் கூறப்பட்டதாம். இனி நம் தலைவர்கள் யாத்த கரணத்தியலினை ஆராய்வோம்.

தமிழ் மணம் ஓங்குக.

---

## "ஊமர் மூவர்"

திரு. வித்துவான். K. கோவிந்தன், திருவத்திபுரம்.

செந்தமிழ்க் கருவூலங்களாகிய சங்க இலக்கியங்களை ஒரு முறை ஊன்றி நோக்கும் பேற்றினைப் பெற்றவர்கள், அந்நூல்கள் 'நவில் தொறும் நயந்தருதலையும்," பண்புடையாளர் தொடர்பு, பயிலுந்தொறும் இன்பம் தருவதற்கு, நவிலுந்தொறும் நூல்நயம் தருதல் பொருந்திய உவமை யாதலையும் காண்பர். பண்டைப்புலவர்கள், தங்கள் உளத்திடை எழுந்த எண்ணங்களை, அன்று தாம் கண்ட இயற்கைக் காட்சிகளை, உலக மக்களுக்கு விளக்க-காட்ட-அவர்களால் மேற்கொள்ளப்பட்டனவே இலக்கியங்களாம். புலவன், தன் உளத்திடை எழுந்த கருத்துக்களை, தான் கருதியதே அன்றி, கேட்டோர் மனத்தின் கண்ணும், தான் கருதியாங்கே, கருத்தெழுமாறு செய்து உணர்த்துதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையப் பெய்து கூறுவதே சிறந்த இலக்கியமாம்.

அவ்வாறு தன் கருத்திடை எழுந்த எண்ணங்களைப் பிறர்க்கு விளக்கப் புகுங்கால், புலவன் பலமுறைகளைக் கையாளுகின்றான். அவற்றுள் உவமை என்பதும் ஒன்றாம். உலகப் பொருள்கள் அனைத்தும் காணக்கூடியன, காணக்கூடாதன என இருவகைப்படும். அவற்றுள், காணக்கூடிய பொருள்களுள்ளும் அனைத்தையும் கண்டவர் உலகத்து ஒருவரும் இலர். ஆதலின், உலகப்பொருள்களுள், ஒரு சிலவற்றைக் காணாதார்க்கு, அவற்றைக்கண்டவர் விளக்கப்புகுங்கால், அப்பொருள்களோடு சில வாற்றான் ஒத்துவிளங்கும் இயல்புடையனவாய், அவர்களால் அறியப் பட்டனவாய பொருள்களை எடுத்துக்காட்டி இவை போலும் அவை என்று விளக்குவர். இதுவே உவமை எனப்படும். இம்முறை, உலகத்தில் கற்றறிந்த பெருமக்கள் முதல், கல்வியறிவில்லா மக்கள் வரையிலும் காணக் கிடப்பதொரு முறையாம். அத்தகைய உவமங்களின் இயல்பும், சிறப்பும், தொல்காப்பியம் போன்ற நூல்களில் விரித்துக் கூறப்பெற்றுள்ளன; அவற்றை ஆண்டுக்காண்க. இனி, ஈண்டு அத்தகைய உவமையாக, ஊமர் மூவர், "கண்ணில் ஊமன்" எனவும், "கையில் ஊமன்" எனவும். "உயர்திணை ஊமன்" எனவும் கூறப்பட்டிருப்பதின் நயத்தை ஒரு சிறிது நோக்குவதே கட்டுரையின் நோக்கமாம்.

1. பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பெருமான், வறுமையில் வாழ்ந்தவர்; அவர் தாயோ, வெண்ணூல் விரித்தாற்போன்ற வெண்மயிரினள்; யாண்டு பலவாகியும் தனக்கு இறப்பு வாராமையின், தன் வாழ்நாளோடு புலந்துரைக்கும் இயல்பினள்; கையில் கோல்தாங்கியிருப்பவும், விரைந்து நடக்கமாட்டாமையின், குறும்பல நடக்கும் பெருமூப்பு உடையாள். அவர் மனைவியோ, உணவின்மையின் மெலிந்த உடலுடையாள்; சிறு பிள்ளைகள் பலகாலும் பிசைந்து உண்பதால் பால்வற்றிய முலையினையுடையாள்; மாசொடு கிழிந்த உடையள்; குப்பைக் கீரையைக் கொய்து கொணர்ந்து, உப்பின்றி உணவாக்கித் தம் மக்களுக்கு ஊட்டித் தான் மட்டில் உணவினை மறந்தவள். அவர் தம் மக்களோ, வீட்டில் உணவின்மையின், வீட்டிற்கு வருதல் வேண்டும் என்ற நினைப்பேஇன்றிப் பலநாள் தொடர்ந்து வீட்டிற்கே வாரா இயல்பினர்; ஒரோ ஒருநாள் வரின், வந்து வீட்டில் உள்ள கலங்கள் பலவற்றையும் திறந்து திறந்து பார்த்து, அவற்றுள் உண்ணுதற்குரிய பொருள் ஒன்றும் இன்மைகண்டு அழும் இயல்பினர்; அவர் அழுகையைக் கண்டதாய், அவர்தம் அழுகையைப் போக்க, "புலி, புலி" என்று கூறி அச்சுறுத்தி அவர்தம் அழுகையைப் போக்கி, அச்சத்தால் அழுகை ஒழிந்து நிற்கும அவர்தம் அச்சத்தைப் போக்க" புலி அல்ல; அதோபார் அம்புலி" என்று திங்களைக் காட்டி அவர்தம் அச்சத்தையும் ஒழித்து, மகிழ்ச்சியூட்டி விளையாடச் செய்கின்றாள்.

இத்தகைய இழிந்த வறுமை வாழ்க்கையில் வாழினும், புலவர் வறுமையிற் செம்மையுடையார்; "பெருக்கத்து வேண்டும் பணிதல், சிறிய

சுருக்கத்து வேண்டும் உயர்வு" என்ற சீரிய கொள்கையுடையார். ஒரு அரசன் சிறிது பொருள் கொடுத்தானாக, அதனை வாங்காது,

"இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண் இனி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண்இனி."

என்று கூறி அப்பொருளைப் பெறாதே சென்றவர்; அதே அரசன் வேறு ஒருமுறை, உள்ளத்தே மகிழ்ச்சியின்றி, புலவருக்குப் பொருள்கொடுக்காது ஒழியின்பழிப்பரே என்ற எண்ணத்தால் விருப்பின்றி பொருள் கொடுத்தானாக. அந்நிலையை அறிந்து,

"எழுவினி நெஞ்சம்! செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கை இல்வழி
அருகில் கண்டும் அறியார் போல
அகனக வாரா, முகன்அழி பரிசில்
தாளிலாளர் வேளார் அல்லர்;
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம்; பேணுநர் பலரே".

என்றுகூறி, அம்முறையும் அப்பொருளைப்பெறாதே சென்றவர்; கடையெழு வள்ளல்களில் ஒருவனும், சிறந்த கொடையாளியும், ஔவைக்கு அரிய நெல்லிக்கனி கொடுத்தவனும் ஆய அதியமான் நெடுமான் அஞ்சி, ஒருகால், பெருஞ்சித்தரனார் தன்னூர் வந்துள்ளார் என்பதை அறிந்தும், புலவர் தம் பாடல் கேட்டு அவர் அளவறிந்து மகிழ்ந்து பொருள் கொடுக்கும் இயல்புடையவனாயிருந்தும், அன்று தன்நாட்டுஅரசியல் அலுவலால், அவரைக் கண்டு மகிழ்தற்குரிய காலமின்மையானும், சின்னாள் நீட்டித்து அவரைக் கண்டு, அவர் பாடல் கேட்டு அவர் வேண்டும் பொருள் தரவிரும்பின், அவர் வறுமையின் நிலையை அறிந்த தான் அவ்வாறு காலம் நீட்டிப்பது கூடாதாகலானும், அவரைக்காணாதே, அவர்க்கு வேண்டும் பெரும் பொருளைக் கொடுக்குமாறு பணிக்க, அஃதறிந்து,

"காணாது ஈத்த இப்பொருட்டு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்
தினையனைத்து ஆயினும் இனிது, அவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே".

என்று கூறி அப்பொருளையும்பெறாது சென்றவர். "புலிபார்த்து ஒற்றிய களிற்று இரை பிழைப்பின், எலிபார்த்து ஒற்றாதாகும்" என்ற உயரிய

25



கொள்கையை உடையவர்; இந்நெறி, தன் அளவறிந்து, அகமும், முகமும் மகிழ்ந்து பெரும் பொருள் கொடுக்கும் அரசரையே பாடிப் பெரும் பொருள் பெற்றுவரின். பெற்ற பொருளைத் தாமே தனித்து உண்டு மகிழ்தல் வேண்டும் என்ற இழிந்த கொள்கையிலராய், "வல்லாங்கு வாழ்தும், என்னுது, நீயும் எல்லார்க்கும் கொடுமதி மனை கிழவோயே!" என்று தன் மனைவியை நோக்கிக் கூறும் இயல்புடையர். இதுகாறும் கூறியவாற்றான், பெருஞ்சித்திரனர் என்ற புலவர் பெருமான், பெரியதொரு சுற்றத்தினையும், மிக்க வறுமையினையும் உடையார் என்பதும், வறுமையில் வாழினும் தன்னிலையில் தாழா மானம் உடையார் என்பதும், தன் அளவறிந்து இன்முகத்துடன் பெரும் பொருள் கொடுக்கும் வள்ளல்களையே பாடும் இயல்பினர் என்பதும் பெற்றும். நிற்க.

வெளிமான் என்னும் அரசன் பெருஞ்சித்திரனர் காலத்திருந்த ஒரு குறுநில மன்னன்; சிறந்த கொடையாளி; கோடைக்காலத்துக் கொழு நிழல் என்னத் தன்பால் வரும் புலவர் பலர்க்கும் பெரும்பொருள் வழங்கும் வள்ளியோன்; சிறந்த வீரன்; களிறும், முரசும் நிறைந்த பெரும்படையுடையான்; பலகாலும் புலவர் பெருஞ்சித்திரனரின் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தவன். இத்தகைய அரசனைப்பெற்றதால், இனித் தன் வறுமையும், வறுமையால் வாடும் தன் சுற்றத்தின் துன்பமும் ஒழிந்தன எனப் புலவர் பெருமான் பெருஞ்சித்திரனரால் கருதப்பட்டவன்; அத்தகையோன் இறந்து விட்டான்; இறந்த செய்தியறியாது புலவர்பெருமான் பரிசில் பெற்றுச் செல்ல வருகின்றார்; வந்தவர் அரசன் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்கின்றார்; சோறட்டு வைத்துச்சென்ற ஒருவன் சிறிதுபோழ்து கழித்து மீண்டுவந்து சோறுண்ண அப்பானையைத் திறந்து நோக்க அதில் இருக்க வேண்டிய சோறு இல்லாமல் அதற்கு மாறான நெருப்பு இருக்கக்காணின், அவன் உள்ளம் அக்காலை எந்நிலையை அடையுமோ, அந்நிலையை அடைகின்றார் புலவர், புலம்புகின்றார்; அவர் புலம்பிக் கூறுவனவற்றைக் கீழே காண்க:—

"வெந்திறல் கூற்றம் பெரும்பேது உறுப்ப
எந்தை யாகுல வதற்படல் அறியேன்,
அந்தோ! அளியேன் வந்தனென்; மன்ற
என்னுகுவர் கொல் எற்றுன்னியோரே?
**மாரி இரவின் மரங்கவிழ் பொழுதின்**
**ஆர்அஞர் உற்ற நெஞ்சமொடு ஒராங்குக்**
**கண்ணில் ஊமன் கடற்பட்டாங்கு,**
வரைஅளந்து அறியாத் திரையரு நீத்தத்து
அவல மறுசுழி மறுகலின்
தவலே நன்றுமன்; தகுதியும் அதுவே."

பேரின்ப வாழ்க்கையில் வாழும் மக்களுக்கு இடையே, அவர் எதிர் நோக்கா நிலையில் பெருந்துன்பம் நேரின் அக்காலை அவர் "கலங்கவிழ் மக்கள் நிலையை அடைந்தேம்" என்பர். அந்நிலையை-ஏன்-அந்நிலையினும் மிக இழிந்த நிலையை அடைந்ததாகக் கூறுகின்றார் புலவர். தான் செல்லும் கலங்கவிழினும், வேறு பிற கலங்கள் அவ்வழி வருதலும் உண்மையின், அவற்றைப் பற்றிக்கொண்டு செல்லலாம் எனிலோ, அக்காலம், கலம்பல கவிழ்தற்கு ஏதுவாகிய 'மாரிக்காலம் ஆதலின், கலம் பிறவருதற்கே ஏது இல்லையாம். மாரிக்காலத்துப் பகற் காலமாயின் ஒரு கால் ஒரோவொரு கலமும் வருதலும் உண்டு; அதற்கும் வழி இல்லை என்பார். "மாரி இரவில்" என்றார். மாரிக்காலத்து இரவிலும் ஒரு சில கலம் வரின், அவற்றைக் கண்டு, உதவி பெறுதற்கு வழியில்லை என்பார் "கண்ணில்" என்றும் கூறினர். கண்ணில்லையாயினும், காது கேட்கும் ஆற்றல் உடையதாய் இருத்தலினால், கலம் வரும் ஒலியால், தன் அருகே கலம் உண்மையினை அறிந்தானாயினும், தான் கடலிடை வீழ்ந்து துன்புறுவதைக் கூறி, அக்காலத்தில் உள்ளாரை உதவிக்கு அழைக்கும் ஆற்றல் இல்லை என்பார் "ஊமன்" என்றும் கூறினர். இந்நிலையில், உதவி பெறக்கூடாத மாரி இரவில், கலம் கவிழப்பெற்று, ஒருகால் கலம் பிறவரினும், அவற்றைக் கண்ணால் கண்டோ, காதால் கேட்டோ, உதவி பெறமுடியாத நிலையில், கண்ணும் பேச்சுத் திறனும் அற்ற ஒருவன், கடலிடையே வீழ்ந்து, அம் மாரி இரவில், மாரி மேலே விழ்ந்து துன்புறுத்த மாரிக்காலமாதலின், தன் இயல்பினும், மிக்க ஆற்றல் உடையதாய் வீசும் அலைகள் அலைக்க, உயிரும் விரைவில் நீங்கப்பெறாது, பொறுத்தற்கரிய துன்பம் நிறைந்த நெஞ்சுடன், கடலிடையே கலங்கும் ஒருவனைப்போல வருந்துகின்றேன் என்ற உவமை, அவர் வாழ்க்கை நிலையையும், மன நிலையையும், அரசன் வெளிமானின் வள்ளல்தன்மையையும் அறிந்தவர்களுக்குச் சாலப் பொருத்தம் உடையதாகத் தோன்றி, புலவர், வெளிமான், இறந்ததினால் கொண்ட துன்ப நிலையை விளக்குவதோடு, அச் செய்யுளைப் படிப்பவர் ஒவ்வொருவரையும் உறுதுயர் உறச்செய்யும் என்பது உறுதி.

2. அன்பும், ஆன்றகுடிப்பிறப்பும் உடையான் ஒரு தலைமகன் உளன்; அவன் நயனும், நண்பும், நாணும் நன்குடையன்; பயனும், பண்பும், பாடறிந்தொழுகலும் பெரிதும் உடையன்; ஞாயிறு வெம்மை மாறி, தண்மை எயிதினும், திங்கள் தீரா வெம்மையொடு திசை நடுக்குறுப்பினும், தான்மட்டில் தன் நிலையில் ஒரு சிறிதும் திரியா இயல்பினன்; வானம் துளங்கில் என்? மண் கம்பமாகில் என்? மால்வரையும் தானம் துளங்கித் தலைதடுமாறின் என்? தண்கடலும் மீனம்படில் என்? விரிசுடர் வீழில் என்?" என்ற அசையா உள்ளம் உடையான்; "வான்கெட்டு, மாருதம் மாய்ந்து அழல், நீர், மண்கெடினும், தான் கெட்டல் இன்றிச் சலிப்பறியாத் தன்மையன்; போரில், அடன்மாமேல் இருந்து போர் ஆற்றும் ஆற்றலான்; உலகம் அனைத்தும் ஒருங்கே தன்பால் வரினும்

அவற்றைக் காப்பாற்றும் உள்ள முடையான்; வழூச்சொல் இன்றி, வார்த்தை கூற வல்லார் முன்னும், அவர்நாண சொல்லாடவல்லான்; சால்பினுக்குத் தளரா உள்ளமும், பித்தன் என்று பிறர் மலைத்தறியாமைக்கு ஏதுவாயதெளிவும், யாரையும் எத்துணையும் தேற்றும் அறிவு வன்மையும் உடையான்;

அத்தகையான், ஒரு நாள் "அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ?" என்று ஐயுறுதற்கேதுவாய உருவுநலனும், குணநலனும் பெற்று விளங்கும் ஒருத்தியைக் கண்டு, அவள்பால் அன்புகொண்டு, இருவர் உள்ளமும் அன்பால், செம்புலப்பெய்ந்நீர்போல, ஒன்றாகக் கலந்தபின்னர், அவளைக் கூடி இன்புற்றான்; இன்புற்ற அவன், அவளை மறுவலும், மறுவலும் பெற விழைகின்றான்; எனினும், அவள், தனக்கு நல்லள் ஆதலை அறிந்த அவன், அவள் பெறுதற்கு அரியள் ஆதலையும் அறிகின்றான்; அறிந்தவன், அவள்பால் கொண்ட அன்பின் மிகுதியாலும், அவளைப் பெற முடியாமையாலும் வருந்துகின்றான்; வருத்த மிகுதியால் அறிவும், உருவும் திரிந்து, தன் ஆருயிர்த்தோழன் துணைபெற்றாயினும், அவளைப் பெறுதல் வேண்டும் என்ற துணிவுடன், அவன்பால் செல்லுகின்றான். "மண்பாதலம் புக்கு, மால்கடல் மூடி, மற்று ஏழுலகும், விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே" என்று கூறும், கலங்கா உள்ளமுடைய தன் நண்பனின் கலங்கிய நிலையைக் கண்ட அவன் "கூடலின் ஆய்ந்த, ஒண், தீம் தமிழின் துறைவாய் நுழைந்தோ? அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ?" நீ இவ்வாறு கலங்கியது என்று வினவுகின்றான். தலைவன் உற்றதெல்லாம் கூறி, "ஒண்ணுதற்கோஒ உடைந்ததே, ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு" என்று கூறுகின்றான். கேட்ட அவன், தன் நண்பன், காமநோயால் கலங்குகிறான் என அறிந்து, எள்ளிநகையாடி "காமம் காமம் என்பர்; காமம் அணங்கும் பிணியும் அன்றே"; "அது வெருட்டினால் நாய் போல் ஓடிடும், வெருவினால் குரைக்கும், துரத்தும்," எனவும், நன்றறிந்து முறைசெய்வார் தாமே தகவிலவே செய்வாராயின், முறை செய்வார் யாரோ?" எனவும் இடிக்கும் துணையாய சொற்களைக் கூறி அவனைத் திருத்த முயலுகின்றான்; அச் சொற்களை எல்லாம் கேட்ட தலைவன், யான், தவறு செய்ததாகக் கொண்டு, இடிக்கும் துணையாய சொற்களைக் கூறி என்னைத் திருத்த முயலும் என் நண்ப! இந்நோயை, என் நோய் எனக் கருதாது, நின் நோய் எனவே கருதி, நின்பால் கூறின், நீ போக்குவாய் என்னும் துணிவுடனேயே இதுகாறும் இக் காமநோயை ஆற்றியிருந்தேன். நீ, இவ்வாறு கூறுவையாயின், இனி, இந்நோய், ஞாயிற்றின் வெய்யில் கடுமையாகக்காயும் வெப்பம் மிக்க கற்பாறை இடத்தே, கையும், வாயும் அற்ற கையில் ஊமன் ஒருவன் தன் கண்ணே கருவியாகக்கொண்டு காக்கின்ற வெண்ணெய், மேலே வெய்யிலின் வெப்பத்தாலும், கீழே கற்பாறையின் வெப்பத்தாலும் உருகி ஓட, அதை, அக்கையில் ஊமன், தன் கையால் வழித்துக் காப்பாற்றவும் மாட்டாமல்,

பிறரை அழைத்துக் காப்பாற்றவும் மாட்டாமல் வருந்த, அது அந்நிலையில், உருகி, வழிந்து, பரந்து ஓடுவதை ஒப்ப. என் காம நோயும், என்னாலும் போக்கமாட்டாமல், நின்னைப் போன்ற என் நண்பராலும் போக்க மாட்டாமல் மிகுகின்றது; அது என்னால் பொறுக்க முடியாத அளவில் பரவி விட்டது என்று கூறுகின்றான்.

"இடிக்கும் கேளிர்! நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமன் தில்ல;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய்; நொன்டு கொளற்கு அரிதே."

ஈண்டு, அந்நோயைத் தானே போக்கிக் கொள்ளமாட்டாமையின் தன்னைக் கையற்றவன் எனக் கூறும் முறையும், தன் துயரை அவன் துயராகக் கொண்டு போக்கும் இயல்பினனாய தன் நண்பனே தன் துயர் கேட்டுப் போக்க முயலாது. எள்ளி நகையாடுவானாயின், தன் துயரைப் போக்குவார் வேறு பிறர் இல்லை ஆகவே, தன் துயரைக் கூறிக்கொள்ளவும் இடம் இன்மையின், தன்னை ஊமன் எனக் கூறும் முறையும், சிறுவெப்பத் தாலும் எளிதில் உருகக் கூடிய வெண்ணெய், ஞாயிறு காயும் கற்பாறை இடத்தே விரைந்து உருகி ஓடிப் பரவுதலைப் போலத் தன் நோயும், விரைவிலே மிக்குத் தன்னைத் துன்புறுத்துகின்றது என்று கூறும் முறையும் அறிந்து மகிழ்தற்பாலதாம்.

3. தலைவன் பொருள் வயிற் பிரிந்துவிட்டான்; தலைவனைப் பிரிந்தறியாத தலைவி, தலைவன் பிரிவினால் மிகவும் வருந்துகின்றாள்; தலைவன் சென்ற ஆற்றினை நினைக்கின்றாள்; அதுவோ, வெம்மையின் மிகுதியாலும், நீரும், நிழலும் இன்மையாலும் தன் இடைவருவார் தமக்கு மிக்க துயரை விளைப்பது; புலி, யானை முதலிய கொடும் விலங்குகளின் கொடுமை ஒருபால் மிக்கது; ஆறலை கள்வரின் அச்சம் வேறு ஒருபால் கொண்டது. இத்தகைய ஆற்றிடைச் சென்ற அவர்க்கு யாது துன்பம் உண்டாகுமோ என்று அஞ்சுகின்றாள்; அவ்வச்சத்தால், அவன் பிரிவால் உண்டாகிய துன்பம் மேலும் மிகுகின்றது; உடல் மெலிகின்றது; உயிர் போம் நிலை உண்டாகின்றது. அந்நிலை கண்டு வருந்திய அவள் உயிர்த் தோழி, அவளை அணுகி, கவன்று உரைத்து அவளை ஆற்ற முற்படுகின்றாள். அந்நிலையில் தலைவி, தோழியை நோக்கி, "தோழி! நம்மைப் பிரிந்து சென்ற வன்கண்மை மிக்க, நம் தலைவரின் கொடுமையால், உண்டாகும் துயரினும், அவர் சென்ற துயர் மிகு ஆற்றினை நினைக்குந்தோறும் உண்டாகும் துயரம் பன்மடங்கு மிகுகின்றது. இத்துயரம், இரவிலே

ஒரு பசு, கிணறு ஒன்றிலே விழுந்து துன்புற, அதைக்கண்டு நிற்கும் உயர் குலத்திலே பிறந்த ஊமன் ஒருவன், அதன் துயரைத் தான் ஒருவனுகவே போக்கவும் முடியாமல், அதன் துயரைப் போக்குவாரிடத்தே கூறவும் மாட்டாமல் வருந்துவதைப்போல, இத்துயரை யான் ஒருத்தியே போக்கிக் கொள்ளமாட்டாமல், போக்குவாரைக் காணுமையின், தன் துயரைக் கூறிக் கொள்ளவும் மாட்டாமல் வருந்துகின்றேன்'' என்று கூறுகின்ருள்.

"கவலே யாத்த அவல நீளிடைச்
சென்ருேர் கொடுமை எற்றித் துஞ்சா
நோயினும் நோயா கின்றே? கூவல்
குராலான் படுதுயர் இரவில் கண்ட
உயர்திணே ஊமன் போலத்
துயர் பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே''.

ஆவின் துயரைக் கண்டவுடன் அதனைப்போக்க வேண்டிய உயர் திணையில் பிறந்திருந்தும், அதனைத் தானும் போக்கமாட்டாமல், போக்குவாரிடத்தே கூறவும் மாட்டாமல் வருந்திய உயர்திணை ஊமனைப்போல, தன் துயரினை வெளிக்குக் காட்டலாகா நிறையுடையாளாய் இருந்தும், தானேயும் போக்கிக்கொள்ளாமல், போக்குவாரையும் காணுமல், தனியாகவே வருந்துகின்றேன் என்று கூறியது நயம் மிக தருவதாம்.

# வால் வெள்ளி

திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை.

வால் வெள்ளி என்பது வாலையுடைய வெள்ளி என விரியும். இத்தகைய வெள்ளியொன்றை அண்மையில் நாம் யாவரும் மாலைநேரத்திற் கண்டோம். "வால்வெள்ளி தோன்றிவிட்டது, அதனுல் இனி உலகத்தில் விளையவிருக்கும் கேடுகள் பலவாம்'' என்று பலர் பலவிதமாகப் பேசி யதை நாம் அறிவோம். வால்வெள்ளி 'தூம கேது'' என்றும் அழைக்கப் பெறும்.

## பழந்தமிழ் நூல்கள்.

கம்பநாடர் தமது இராமாயணம் அயோத்தியாகாண்டம் மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் வசிட்டமுனிவர் இராமனுக்குக் கூறிய உறுதி மொழியாகப் பின்வரும் பாடலைக் கூறினர் :—

“ தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே ”.

இதன் பொருள் :—“பூமியில் வால்வெள்ளிபோலத் தோன்றும் பெண்களினல் விளையும் காமம் என்பது இல்லையானல் கடுங்கேடும் இராது. நரகமும் இராது” என்பது. இதனல் நரக வேதனை போன்ற கடுங் கேடுகள் வால்வெள்ளித் தோற்றத்தால் விளைவன என்பதை நாம் அறியலாம்.

பண்டைச் சங்க இலக்கியங்களாகிய சிலப்பதிகாரத்திலும் அதற்கு முற்பட்டதாகிய புறநானூற்றிலும் இவ்வுண்மை குறிக்கப் பெறுகிறது. **சிலப்பதிகாரம்** நாடு காண் காதையில் வால்வெள்ளி, ‘ புகைக்கொடி ”, என்ற பெயராற் குறிக்கப் பெறுகின்றது. நாடு காண் காதையில் அடிகள் 102—105 :—

“ கரியவன் புகையினும் **புகைக்கொடி** தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பில் கடுங்குரல் ஏற்றெடும்
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்ப ” என்பன.

இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் பின்வருமாறு உரைகூறுகிருர் :— “கோள்களிற் சனிக்கோள் இடபம் சிங்கம் மீனமென்னும் இவற்றிேடு மாறுபடினும், ஆகாயத்தே தூமக்கோள் எழினும், விரிந்த கதிரையுடைய வெள்ளிக்கோள் தென்றிசைக்கண்ணே பெயரினும், காற்றுப் பொரும் குடகவரையினது உச்சிக்கண்ணே கடிய குரலையுடைய உருமேற்றேடு சூன்முதிர்ந்த பருவப்புயல் தன் பெயலாகிய வளத்தைச் சுரத்தலானே ”. “புகைக்கொடி, வட்டம், சிலை, நுட்பம், தூமமென்னும் கோள்க‘ ளுங்கினும் தூமக்கோள் ”. “ புகையினும் தோன்றினும் படரினும் என்ற உம்மைகள், மழை பெய்தொழில் மாற இவற்றில் ஒன்றே அமையுமாகவும் இவையெல்லாம் சேரினும் ”.

இதுவே புறநானூற்றில் 117-ம் பாட்டு அடிகள் 1-3ல்

> "மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
> தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
> வயலக நிறையப் புதற்பூ மலர".

என்று கூறப்பெறுகிறது

இவ்வடிகளுக்குப் பழைய உரைகாரர் "சனி மீன் புகைகளோடு கூடிப் புகையினும், எல்லாத் திசையினும் புகை தோன்றினும், தென்றிசைக் கண்ணே வெள்ளி போக்குறினும், வயலிடம் விளைவு மிகப் புகலிடத்துப் பூமலர" என்று உரை காண்கின்றார். இதன் அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் பின்வருமாறு எழுதுகின்றார்.

"சனி கரியநிறமுடையனாதலின் மைம்மீன் என்றார்; சனி புகைதலாவது, இடபம் சிங்கம் மீனம் இவற்றோடு மாறுபடுதல். இவற்றுள் சனி தனக்குப் பகைவீடாகிய சிங்கராசியிற் புகின் உலகிற்குப் பெருந்திங்கை விளைப்பன் என்பதை, 'மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்' (தேவாரம்), 'அடையார்தமக்கு, மகத்தின் சனியன்ன திரவாணன்' (தஞ்சைவாணன் கோவை 48), 'மகத்தில் வாழ்சனி யாயினை' (வாயுசங்கிதை, கடவுள் 7), 'விசயன்றம் முற்குதவி செய்யாமன், மகத்திற் சனிபோல் வளைக்குவம் யாம்' (வில்லிபாரதம் பதினேராம் போர் 40), என்பவற்றாலுணர்க. தூமம், புகைக்கொடி என்றும் கூறப்படும்; தூமகேது என்பதும் இதுவே; இது வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்னும் கரந்துறைகோட்கள் நான்கனுள் ஒன்று; இதன் தோற்றம் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிக்குமென்பார்".

## சோதிட நூல்கள்.

சோதிட நூல்களும் இங்ஙனமே கூறுகின்றன. பிரகத்சங்கிதை பதினேராம் அத்தியாயத்தில் பின்வருமாறு கூறப்பெற்றுளது:— "தூமகேது ஒன்றுமுதல் இருபத்துநான்கு நாட்கள்வரை காணப்பட்டால் ஒன்றுமுதல் இருபத்துநான்கு மாதங்கள் வரைக்கும், இருபத்தைந்துமுதல் மூப்பதுநாள்வரை காணப்பட்டால் இரண்டாண்டுகள் வரைக்கும், இரண்டரைமாதங்கள் வரை காணப்பட்டால் நான்காண்டுவரைக்கும் பலன் காணப்படும். பலன் தூமகேதுகாணப்பட்டதுமுதல் மூன்றுவாரத்திற்குள் உண்டாகும். பொதுவாக வால்வெள்ளிகள் சிறியவாகவும் தெளிவாகவும் காணப்பட்டால் செழிப்புண்டாகும். இவ் வால்வெள்ளிகளுக்கு ஊடே விண்மீன்கள் உருகிப்பாய்ந்து குறுக்கிட்டால் மனிதர்களுக்கு நன்மையுண்டு. வால் வெள்ளிகள் தோன்றுகிற காலத்தில் மழைபெய்தால் மிகுந்தநலன் விளையும். ஆனல், சோழநாடு, அவந்தி, அங்கம்

முதலியநாடுகளுக்கும் வெள்ளைமனிதர் சீனர் இவர்களுக்கும் துன்பம் மிகும். துருவமீன், எழுமுனி மண்டிலம், கேட்டைநாள் இவைகளின் வழியாக வால்வெள்ளி சென்றாலும் குறுக்கிட்டாலும் எதிர்த்தாலும் மேகங்கள் அழிந்துபோகும்; ஆயிலியத்தைக் குறுக்கிட்டால் பஞ்ச முண்டாகும். தூமகேது எந்தெந்த நட்சத்திரத்தில் நெடுகாட்களாகக் காணப்படுகிறதோ அந்தந்த நட்சத்திரத்துக்குச் சம்பந்தப்பட்ட ஊர்வன முதலாக மனிதர் ஈருக உள்ள ஏழுவகைத் தோற்றங்களும் துன்பம் பெறும்.

### மேல்நாட்டுப் புலவர்

மேல்நாட்டினரும் வால்வெள்ளிகள் தோன்றும்போது என்னென்ன கேடுகள் விளையுமோ என்று நடுங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர். அவர்கள் வால்வெள்ளிகளைப்பற்றி என்ன கூறுகின்றனர் என்பதை ஆராய்வோம். இற்றைக்கு நூறாண்டுகளுக்குமுன் கி. பி. 1842-ல் "வான நூல்" என்றொரு நூல் திரு. கேரே என்ற புலவரால் ஆங்கிலத்தில் எழுதப் பெற்று வெளிவந்துளது. அதில் வால்வெள்ளிகள் பற்றிய அதிகாரம் பக்கம் 47 முதல் 53 முடிய காணப்படுகிறது. அதனைத் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளும்படி இங்கே மொழி பெயர்த்துத் தருகின்றோம்.

"தூமகேதுவின் துலங்கொளிப் பறப்பை
என்றும் நீதான் கண்டதில்லையோ!
புகழ்மிகப் பெற்ற இப் புதியவன் போக்கில்
தன்னீள் எரித்தொடர் தனிலிருந் திங்கே
பார்க்கும் மனிதர்பாற் பயமிகப் பொழிகிறான்.
ஞாயிற்றுப் புகழினும் நற்புகழ் மீன்களும்,
எண்ணில் கரைகளும், எழில் விசும் பதனின்
ஆழமெல்லாம் ஆரச் சுழன்று
வானின் மாண் முனை மடித்துத்திரிந்து
ஆயிர மாண்டுகள் அகல் பயணத்தொடு
மண்ணுல கதனை மறுபடி அணுகிடும்".

யங்கு (Young) என்ற ஆங்கிலப் புலவர் பாட்டு.

### வால்.

"நாம் இப்போது விவரித்த வியாழன் முதலிய கோள்கள் எப்போதும் நம் கண்ணிற்படுவன; ஆனால் ஞாயிற்று மண்டிலத்தைச் சேர்ந்த, நம்

கண்ணில் அடிக்கடி தோன்றுமல் அருமையாகவே காணப்படுகிற, சிலபொருள்கள் இருக்கின்றன; அவைகளே வால் வெள்ளிகள்; மங்கலான ஒளியுடைய ஆவியால் அவை சூழப் பெற்றிருக்கின்றன. இவ்வாவிப் போர்வை, மூடி (Coma) எனப் பெயர் பெறும். தூமகேது ஞாயிற்றை நெருங்க நெருங்க இம்மூடி மிக்க ஒளியுடையதாகிறது. கடைசியில் இம்மூடி கிளைத்துப் பாய்ந்து ஒளிபுகும் நீளமான ஆவித்தொடராகின்றது; இத்தொடர் வால் எனப்படும்; இவ்வால் எப்பொழுதும் ஞாயிற்றின் எதிர்ப்புறமாகவே நீண்டிருக்கும். வால்வெள்ளி தோன்றுவது சிறிது காலமே; அத்தோற்றம் சிலமாதங்களின் மிகுவது அருமை; சிலவேளை சிலவாரங்களே அது தோன்றும். கோள்கள் மேற்கிலிருந்து கிழக்கே சூரிய வீதியிலிருந்து சிறிது சரிந்து தம்பாதையிற் சுழல்கின்றன. ஆனல் வால்வெள்ளிகள் சூரிய வீதியை எல்லாக் கோணங்களிலும் வெட்டிப் போவதை நாம் காணலாம். நட்சத்திர வீதியில் கோள்களைக் காட்டிலும் இவை விரைவாகச் செல்லுகின்றன. இவைகளின் பருமத் தோற்றமும் அடிக்கடி வியப்புறுமாறு மாறுகின்றது. இவை ஞாயிற்றைவிட்டு விலகும் போது இவைகளின் வால் குறுகுகின்றது. கடைசியில் இவை தாம் முதலில் தோன்றும் போதிருந்த உருவையடைகின்றன. சூரியனை நெருங்காத வால்வெள்ளிகளுக்கு மூடி தான் உண்டு; வால் கிடையாது.

"வால் எப்போதும் ஒளிபுகும் நிலையிலேயே இருக்கிறது, ஏனெனில் அதன் வழியாக விண்மீன்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. சில வேளைகளில் விண்மீன்கள் வால்வெள்ளிகளின் தலைவழியாகக்கூடக் காணப்பெற்றன என்று அறிஞர் கூறுகின்றனர். வாலின் நீளமும் உருவமும் பல்வேறு வகையின. சிலவேளைகளில் வால் சில பாகைகளே விரிந்திருக்கிறது; பலசமயங்களில் இது தொண்ணூறு பாகைகள் வரை பரவியிருக்கிறது. 1680ல் தோன்றிய பெரிய வெள்ளியின் வால் எழுபது பாகைகள் (70) நீண்டிருந்தது; 1618-ல் காணப்பட்டதன் வால் நூற்று நான்கு பாகைகள் (104°) பரந்திருந்தது. வால் சில சமயங்களில் பிளவு பட்ட ஒளித்தொடராக இருக்கிறது. 1744ல் வந்த வால் வெள்ளி ஆறு வால்களோடிருந்தது; அவை ஆறும் ஒரே திசையை நோக்கி ஒன்றின் ஒன்று சிறிது சிறிது சரிவாக இருந்தன.

"1811-ல் போந்த அழகான வெள்ளிக்கு, சிறிது நீளமான ஒளி பொருந்திய இரண்டு வால்கள் காணப்பட்டன. அவை 15°யும் 20°யுமாக இருந்தன; சில வேலைகளில் அவை சிறிது அகன்றும் தோன்றின. அவை இரண்டும் கொஞ்சம் வெளிப்புறமாக வளைந்திருந்தபடியால் இடைவெளி மிகச் சுருங்கியே இருந்தது.

### வால்வெள்ளியின் வகைகள்.

"வால்களின் நீளத்திலும் ஒளியிலும் உள்ள தோற்ற வேறுபாடுகளைக் கொண்டு வால்வெள்ளிகள் மூன்றுவகையாகப் பகுக்கப்படுகின்றன.

அவையாவன் :— (1) தாடியுடையன (2) வாலுடையன (3) மயிர்சூழ்ந்தன. ஆனால் இவைமூன்றும் ஒரே வால்வெள்ளியின் பலவகை நிலைகளையே உணர்த்தும். வெள்ளி சூரியனுக்குக் கிழக்கேஇருந்து அவனைவிட்டு விலகிப்போகும்போது அதிலிருந்து கிளம்பிச்செல்லும் ஒளி அதன் தாடி போலக்காணப்படுகிறது ; அதனால் அது **தாடிவெள்ளி** என்று சொல்லப் படுகிறது. வெள்ளி சூரியனுக்கு மேற்கிலிருந்து அவனுக்குப்பின் மறையு மானல் அவ்வொளி வால்போலத் தோன்றுகிறது ; அதனால் அது **வால் வெள்ளி** என்று அழைக்கப்பெறுகிறது. வெள்ளியும் சூரியனும் நேர் எதிராக இருக்கும்போது பூமி இரண்டுக்கும் நடுவேஇருக்கும் ; அப்போது வெள்ளியின் வாலோ தாடியோ முழுதும் வெள்ளியின் உடலால் மறைக்கப் பட்டு, இரண்டுகோடியும் அவ் வெள்ளிக்கிட்ட மயிர் விளிம்புபோலக் காணப்படும் ; ஏனெனில் விளிம்புகள் வெள்ளியின் உடலைக்காட்டிலும் அகலமாகவே இருக்கும் ; அதனால் அது **மயிர்(சூழ்)வெள்ளி** எனப்படும்.

“ ஆனால் பல தூமகேதுக்கள், வாலோ, தாடியோ, மயிரோ இல்லாமல் வியாழனைப்போல மிகத்தெளிவான உருண்டையுடலுடன் காணப்படு கின்றன. இவைகளின் அளவுகள் பலதிறப்படுவன. பலவற்றின் விதை மட்டுமே பல பெரிய விண்மீன்களைக் காட்டிலும் பெரியதாக இருக்கிறது. சில ஆசிரியர் விண்மீன்களினும் மிகப்பெரிய அளவினவான தூமகேதுக் களைப்பற்றிக் கூறியிருக்கின்றனர். அத்தகையதொன்றே பேரரசர் **நீரோ** காலத்தில் தோன்றியது. **செனிகா** என்ற ஆசிரியர் கூறுகிறபடி அது தோற்றத்தில் சூரியனைக்காட்டிலும் பெரியதாகஇருந்தது. 1652ல் **ஏவிலியசு** கண்ட வால்வெள்ளி சற்று மங்கலாக இருந்தாலும் திங்களைக்காட்டிலும் சிறியதாக இருக்கவில்லை ; அது மங்கலான வெளிறிய ஒளியினதாக, பயங்கரமான காட்சியோடு தோன்றியது. நெருங்கி இருண்ட வளி மண்டலத்தால் பல வால்வெள்ளிகள் சூழப்பெற்றுள. அம்மண்டலம் அவைகளின்மேல்விழும் சூரியனின் கதிரின் வேகத்தைக் குறைக்கின்றது. இந்த இருள்மூடியாகிய மண்டலத்தின் நடுவேயுள்ள வெள்ளியின் விதைப் பகுதி ஆகாயம் தெளிவாக இருக்கும்போது அடிக்கடி மிக்க ஒளியோடு விளங்குகின்றது.

(தொடரும்)

# தமிழ் நாட்டுச் சுருக்க வரலாறு.

வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி, தமிழாராய்ச்சியாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.

I

தென்னிந்தியாவின் வரலாறு, ஏனை நாட்டு வரலாறுகளைப்போல, அவ்வளவு வரையறையாகவும் தெளிவாகவும், இதுகாறும் எழுதப் பெறவில்லை. பலரும் பலப்பல பகுதிகளை மட்டும் எடுத்தெழுதியிருக் கின்றனர். நாளுக்கு நாள் தென்னிந்திய வரலாற்றைச் செப்பமாக எழுதுதற்கான சான்றுகளும், முயற்சிகளும் பெருகிக்கொண்டே வருகின்றன. இதனை எழுதுதற்கு நாணயங்கள், பட்டயங்கள் முதலான புதைபொருள்களும், சிதைந்த நகரங்களும் அயல்நாட்டார் குறிப்புக்களும், இலக்கியங்களும் பிறவும் துணைபுரியினும், கல்வெட்டுகளின் துணையே சாலவும் பெரிதாக இருக்கின்றது. கிடைத்துள்ள குறிப்புக்களைக் கொண்டும், போதியவளவு வரலாறு இன்னும் எழுதப்பெறவில்லை. இந்திய வரலாற்றிலும் தென்னிந்திய வரலாறு, சிறப்பாகத் 'தமிழகத்தின் வரலாறு' பற்றிய நூல்கள் மிகவுங் குறைந்தே காணப்படுகின்றன. காரணம் பலவுள. எனினும், இக்குறைபாடு விரைவில் நீக்கம்பெற வேண்டிய தொன்றும்.

தென்னிந்தியாவின் இயற்கையமைப்பில், கிழக்கு, மேற்கு, தெற்கு என்ற திசைகளில் கடல்களும், வடக்கில் விந்திய சாத்பூரா மலைகளும், அடர்ந்தகாடுகளும், எல்லைகளாகவுள்ளன. எல்லைகளாகவுள்ள கடல் களில், ஒரு காலத்தில் தென்னிந்தியாவுடன் சேர்ந்தனவாகவிருந்த இலங்கையும், இலட்சத்தீவுகளும், அந்தமான், நக்கவாரத் தீவுகளும் சிதறிக்கிடக்கின்றன. வடவெல்லைக்கப்பால், 'ஆரிய வருத்தம்' எனப் பண்டே யழைக்கப் பெற்ற வடவிந்தியா பரந்து கிடக்கின்றது. தென் கடலில் குமரி முனைக்குத் தெற்கே பரந்து விரிந்து கிடந்ததும், "இலெமூரியா" என அழைக்கப் படுவதுமான குமரிக்கண்டம் கடல் வெள்ளத்தில் மூழ்கிப் போயிற்று. இதனையன்றி, வடவெல்லைக்கப்பால், இந்தியா முழுமையும், தமிழர்கள் ஒருகால் பரவியிருந்தனர் என்பது உலகத்து வரலாற்றாசிரியர் பலரும் ஒப்புக் கொண்ட கொள்கையாக விருக்கின்றது. 1922-இல் வெட்டப்பெற்ற மொஹெஞ்சதாரோ, அரப்பா ஆராய்ச்சிகளால் இது இன்னும் வலிவு பெற்று, விட்டதோடு, அவர்தம் நாகரிகமும் சிறப்பித்துப் பேசப் படுகின்றது. இங்ஙனம் தமிழர்கள் பண்டே வாழ்ந்த நிலப்பகுதிகள் சிதறியும், சிதைந்தும், போனமையால்,

தமிழ்நாட்டின் வரலாறு ஒரு குறுகிய எல்லையைப்பற்றிக் கூறுவதாக மாறி விட்டது.

தமிழ்நாடு, சுருங்கித் தென்னிந்தியாவின் தென்பகுதியில், 'தமிழகம்' எனப் பெயரிய நாடு வலிவுற்ற காலத்திலிருந்தே, தற்பொழுது வரலாற்று விரிவுகள் தெளிவாகக் கிடைக்கின்றன. தென்னிந்தியாவின், வடபகுதி தக்காணம் என்றும், தென்பகுதி திராவிடம் என்றும், வடநாட்டவரால் அழைக்கப்பெற்றன. வரலாற்றைக் கருதுமளவில் தொல்காப்பியத்தில் கூறிய "வடவேங்கடந் தென்குமரிக்குட்பட்ட நிலப்பரப்பே தமிழகம் என அழைக்கப்படும். இவ்வாறு அமைந்துள்ள தமிழகத்தின் வடிவம் "இந்தியாவின் மூக்குப்" போன்றது. எனவே இதனை இந்தியாவின் நிலமூக்கு (Peninsular India) எனவும் அழைப்பர். இந்நிலப் பகுதியில், கிழக்கிலும் மேற்கிலும் மலைத்தொடர்களும், தாமிரவருணி, வைகை, காவிரி, பாலாறு, பெண்ணை முதலான பேராறுகளும், நிலவெளிகளும், மேட்டு வெளிகளும், காடுகளும் பிறவும் கவினுற விரிந்து கிடக்கின்றன.

இங்கு, சரித்திரகாலத்திற்கு முன்பே நாகரிகமில்லாத மக்கள் பலர் வாழ்ந்து வந்தனர். நாளடைவில் நாகரிகமும் வலிமையும் மிக்கோர் ஒருவரின் ஒருவர் மேம்பட்டுத் தத்தம் ஆணையே நடைபெற்றுவரச் செய்வாராயினர். தோடர், கொண்டர், நாகர் முதலியோர் இந்நிலத்தின் பண்டை மக்களாவர். இவர்கட்குப் பின்னரே தமிழர் தலையெடுப்பா ராயினர். இத்தமிழர், ஆரியர்க்கு முன்பாகவே, நடு ஆசியாவினின்றும் இங்குவந்து குடியேறினரென்றும், மூழ்கிப்போன குமரிக்கண்டத்திலேயே தோன்றி வளர்ந்தவரென்றும் இருபெருங்கொள்கைகள் நிலவுகின்றன. எனினும், பின்னர்க்கூறியது, நாடோறும் வலிவுற்று வளர்கின்றது.

இம் மக்களிடையே நாகரிகந்தோன்றி முதிர்ந்தபொழுது, சேர சோழ பாண்டியம் என்ற மூவேறு நாடுகள் தோன்றின, அவற்றைத் தோற்று வித்து ஆண்டோர், முறையே சேர சோழ பாண்டியர் என்ற குடியில்வந்த கொற்றவர்கள், இவர்தம் பண்டைய ஆட்சியின் விரிவான செய்திகட்கு இலக்கியங்களே பேருதவி புரிவன. பின்னர் பலகால் இவர்தம் ஆட்சி மேம்பட்டும், சிதைந்தும், பிறவேந்தர் தலையெடுத்தும் தமிழகம் பல்வகை ஆட்சிநிலைகளை அடைவதாயிற்று. இப்பிற்காலச் செய்திகட்குக் கல் வெட்டுகள், பட்டயங்கள்போல்வன பேருதவி புரிவன. இங்ஙனம் வீழ்ந்தும் எழுந்தும் வந்த காலநிலைகளை, மூவேந்தர்காலம், பல்லவர்காலம், இடைக்காலத்துச் சோழர்காலம், பிறநாட்டவர் படையெடுப்புக்காலம், நாயக்கர்காலம், மராட்டிய—ஆங்கிலேயகாலம் என அறுவகையாகக் கொள்ளலாம். இவைகுறித்துப் பின்னர் கூறவிருப்பதால் இக்காலங்களில், தமிழகத்தின் வடக்கே தென்னிந்தியாவிலும், தமிழகத்திலும் அவ்வப் பொழுது தோன்றிநின்ற சில அரசகுடியினரின் காலங்களைப் பின்வருமாறு

பகுத்துக் காணலாம். என்னை? தமிழகத்தின் வரலாற்றில் இடையிடையே அவர்களைப்பற்றிய குறிப்புகளும் இன்றியமையாதனவாயிருத்தலின்.

1. கங்கர்கள் 2-ஆம் நூற்றுண்டுமுதல் கி. பி. 1000 வரை.
2. பண்டைச் சாளுக்கியர் ... கி. பி. 500— 630.
3. கீழைச் சாளுக்கியர் ... ,, 630—1000.
4. மேலைச் சாளுக்கியர் ... ,, 630— 750.
5. இராட்டிர கூடர்கள் ... ,, 750— 973.
6. மேலைச் சாளுக்கியரின் எழுச்சி ... ,, 973—1156.
7. களசூரர்கள் ... ,, 1156—1186.
8. ஒய்சலர்கள்
9. யாதவர்கள்
10. காகதியர்கள்

(8–10) 11-ம் நூற்றுண்டு முதல் 1326 வரை.

### மூவேந்தர் காலம்.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" எனத் தமிழ்வேந்தர் மூவரென்றும் அவர் ஆண்ட நாட்டுப்பிரிவுகள் மூன்றென்றும் ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறிச்சென்றுர். இம் மூவர்க்கும் பெயர்க்காரணம் பலதிறத்தான் கூறப்படுகின்றன. இவருள் யார் பழையர் என்பதும் அவ்வாறே பலதிறத்தன. பொதுமையில் மூவரும் மிகப் பழைமை யுடையவர் என்றே யாண்டும் அறியக்கிடக்கின்றது. சரித்திரகாலத்திற்கு முற்பட்டே இவர்தம் ஆட்சிநடந்து வந்ததாகத் தெரியவருதலின், அக்காலச் செய்திகளை, இலக்கியம் முதலான சான்றுகளைக்கொண்டே தெளிய வேண்டியிருக்கின்றது.

இற்றைக்கு 1800 யாண்டுகட்கு முற்பட்ட கடைச்சங்க காலத்திற்கு முன் இரண்டு ஊழிகள் தோன்றித் தமிழ்நாட்டின் ஆட்சி இயற்கை யமைப்பு முதலியவற்றை மாற்றிச் சென்றதாகப் பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. பெருஞ்சோற்றுதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாக ராயர் தலைச்சங்ககாலத்தில் பாடினுர் எனவும், தென்மதுரை கடல் கொண்டபின், பாண்டியனொருவன், வடக்கே படையெடுத்துச் சேர சோழர்களின் நாடுகளைவென்று தன்னுட்டைப் பெருக்கிக்கொண்டா னென்றும், ஆயிரக்கணக்கான புலவர்களைவைத்து அவர்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் தமிழ்ச்சங்கங்கள் நடத்தினரென்றும் தொல் காப்பியம் முதலான நூல்கள் அந்நாளில் எழுதப்பட்டனவென்றும், பிறவாறும் இலக்கியங்கள் கூறுகின்றன, இவையெல்லாம் இன்னும் வரையறையாக உறுதிசெய்யப்படாத செய்திகளேயாம்.

எனினும், கி. மு. 1000 ஆண்டுகட்கு முன்னேயே தமிழர், ஆட்சியிற் சிறந்து, கிரேக்கம் முதலான மேனுடுகளுடன் வாணிபஞ்செய்தனர் என்றும்,

மூவேந்தரும் தத்தம் நாடு வளம்பட ஆண்டனரென்றும், அக்காலத்திலேயே ஆரியர்கள் தமிழ்நாட்டிற் குடிபுகுந்தனரென்றும், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் விசயனென்பான் வடநாட்டினின்று இலங்கைசென்று அதனை யாண்டனரென்றும் அறிகின்றோம்.

இனி, கடைச்சங்க நாளிலிருந்து தமிழக வரலாறு சிறிதுசிறிதாகத் தெளிவும் திட்பமும் பெற்றுவருகிறது. சோழர்கள் மிகப் பழங்காலத்தில், தமது தலைநகராக உறையூரைக் கொண்டிருந்தனர். உறையூரையாண்ட சோழர்களுள்ளே வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளி, உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி என்போர் மிகவுந் தலைமையுடையவராவர். பெருவிறற்கிள்ளி, குடக்கோநெடுஞ்சேரலாதன் என்னும் சேரவேந்தனுடன் பொருது மடிந்தனன். இளஞ்சேட்சென்னி, அழுந்தூர்வேள் என்ற வேளிர்குலத் தலைவன் ஒருவனின் மகளை மணந்து, கரிகாலன் என்ற பெரும் புகழ்வாய்ந்த மகனைப் பெற்றெடுத்தனன். இக்கரிகாலனைக் குறித்துப் பற்பல கதைகள் வழங்கப்படுகின்றன. மக்களுட் சிறந்தோனொருவனைப்பற்றிப் பலவகைப் புனைவுகள் கேட்கப்படுதல் எந்நாட்டினும் இயற்கையன்றோ!

கரிகாலன் இளமையில் தாயையும் பின்னர்த் தந்தையையும் இழந்து, தன் அம்மான் இரும்பிடர்த்தலையார் பெருந்துணையால் அரசுரிமை எய்தினன். இளமையில், குடிப்பிறந்தோர் பலர் ஆட்சியுரிமை காரணமாக, இவன்பால் பொறாமையும், பகைமையுங்கொண்டு இவனுக்குத் தீங்குபல இழைத்தனர், "இவனிருந்த வீட்டைத் தீக்கொளுவினமையால், இவன்கால் கரிந்தது; அதனால் கரிகாலன் என்னும் பெயரெய்தினன்" என்றும் பிறவாறும் பெயர்க்காரணங் கூறுவர். பகைவர் இவனைச் சிறையிட்டனரென்றும், அதனைக் கடந்து வெளியேறி, பகைவரை வென்றடக்கி, அரசு கட்டிலேறினனென்றும் வரலாற்றுக் குறிப்புகள் காணப் படுகின்றன. இவன் நாங்கூர் வேள் என்ற ஒரு குறுநில மன்னனின் மகளை மணந்தனன்.

இவன் அரியணை யேறியதும், தன் உள்நாட்டுக் குழப்பங்களை யடக்கி, எதிர்த்து வந்த குறுநில மன்னர்களையும், சேரபாண்டிய வேந்தர்களையும் வென்று, ஈழத்தில் வென்றிக்கொடி நாட்டி, வடநாடுகளில் வாகைமிலைந்து, அதன் அறிகுறியாகப் பரிசுகள் பலவும் பெற்று, மீண்டு வந்தனன். மீளுமுன், இமயத்தில் புலிக்கொடி நாட்டினன்; இவன்வென்றிச் சிறப்புகள், பட்டினப்பாலை முதலான தமிழ்ப் பழம்பாடல்களில் நன்கறியப்படும்.

இவனுட்சித்திறமை, தமிழன்பு, புலவர்ப் போற்றுதல் முதலியன மிகவும் வியக்கத்தக்கன. வாணிகத்தின் வளத்தைக் கருதித் தன் தலைநகரை உள்நாட்டினின்று நீக்கிக் காவிரிப்பூம்பட்டினம் என்ற துறைமுகத்திற்கு மாற்றி, அதனைப்பெரிதும் செழிக்கச் செய்தனன். இறுதியில்

குராப்பள்ளி என்னுமிடத்தில் மடிந்தனன். இவனைத் திருமாவளவன், கரிகால்வளவன், பெருவளத்தான் எனத் தமிழ்நூல்கள் பலவாறு வழங்கும்.

இவன் மக்கள் மாவளத்தான், சேட்சென்னி நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என மூவர். நற்சோணை என்ற மகளுண்டு என்ப; அது பெரிதும் உறுதியற்றது; ஆதிமந்தியார் இவன் மகள் என்பது பெரிதும் உறுதியுடைத்து. கரிகாலனின் இறுதிநாளில் அவனோடு ஒருகாலத்தவனாக இருந்த பாண்டியன், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி; சேரன் முதலாஞ் சேரலாதன்.

இவனுக்குப் பின்னர் சோழராட்சி வரவரச் சிதைவுற்றது. இவன் மகன் நெடுங்கிள்ளி காரியாறு என்னுமிடத்தில் மாண்டனன். நலங்கிள்ளிக்குக் கிள்ளிவளவன், பெருநற்கிள்ளி என மக்களிருவர். இவருள் முதல்வன், பீலிவளை என்ற நாக நங்கை ஒருத்தியை மணந்தனன். பிந்தியவன் இராசசூயம் ஒன்று நடத்தினன் எனத் தெரிகின்றது. இங்ஙனம் பிந்தித் தோன்றிய சோழ வேந்தருள், மீண்டும் அரசுரிமை காரணமாகப் பிணக்குகள் தோன்றின. செங்குட்டுவன் தலையிட்டு, அதனைத் தீர்த்தனன் எனக் காணக்கிடக்கின்றது. நாளடைவில் இக்குடி அரசொடுங்கி நசித்தது.

சேரர்களுள் முதலாஞ்சேரலாதனே மிகப்பழையவனாகப் பெயரறியப் படுகிறான். இவன், வெண்ணி என்ற இடத்தில் கரிகாலனோடு பொருது, புறப்புண்பட்டு, வடக்கிருந்து மாண்டனன். பின்னர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கரிகாலனை யொப்ப எல்லா விறல்களும் பெற்று ஆட்சியெய்தினன். தமிழகம் முழுவதையும் அடிப்படுத்து, இமயம் வரை சென்று தன் வெற்றிக் கொடி நாட்டி மீண்டனன். ஆங்குத் தம்மை யெதிர்த்த யவனர்களையும் வென்று மானமழியச் செய்தனன். இவன் மனைவி நற்சோணை. இவனுக்குச் செங்குட்டுவன், இளங்கோ என்ற மக்கள் இருவர்.

செங்குட்டுவன் தன் தந்தையை ஒப்ப, வடநாடு சென்று பகைவரைக் கடந்து, தன் தந்தையைப்போல, இமயமுதற் குமரி வரை தன் வென்றி மேம்பட விளங்கினன். தமிழகத்தில், வியலூர், மோகூர் முதலாகப் பல இடங்களில் போர் நிகழ்த்தினன். இவன் காலத்தே கண்ணகி கதை நிகழ்வுற்றது. கண்ணகிக்குக் கல்லெடுக்க ஒரு முறையும், அதற்குமுன் தன்தாயைக் கங்கையாட்டுதற்கு ஒரு முறையுமாக, இவன் இருமுறை வடநாடு சென்று மீண்டனன். கண்ணகிக்குத் தன்னாட்டில் விழா வெடுத்தனன். இவனுடன் கொங்க, மாளவ, இலங்கைவேந்தர் முதலியோர் நட்புடையவர்கள். அக்காலத்து இலங்கைவேந்தன் கயவாகு. இவன் தம்பி, இளங்கோ, அரசு துறந்து துறவு மேற்கொண்டனர். சிலப்பதிகாரம்

பாடிய சிறப்பைப் பெற்றவர் இவரே யாவர். இவர் தம் நண்பர் சித்தலைச் சித்தனர் மணிமேகலை யாத்தனர். மகன் குட்டுவஞ் சேரல்.

இனி, யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பான் இரண்டாவது பாண்டியன் நெடுஞ்செழியனேடு பொருது. அவனல் சிறைபிடிக்கப் பெற்று அதனின்று தப்பிச்சென்று தன்னுட்சி எய்தினன் எனப் புறநானூறு கூறும். இவன் பெருநற்கிள்ளி, மலையமான் என்ற மன்னர்களுடன் பொருது வென்றனன். இவனுக்குப்பின் பெருஞ்சேரலிரும்பொறை என்பவன், தகடூரையாண்ட அதிகமான் என்பவனைப் போரிற்கொன்று, அவன் ஊரையும் பிடித்தனன். இங்ஙனம் சென்ற குடிவழி, இறுதியில் வரவர நசித்துப்போயிற்று. இவர்தம் தலைநகரம் வஞ்சி.

தமிழ் வேந்தர்களுள்ளே பாண்டிய மன்னர்கட்கே தமிழ்வளர்த்த சிறப்பு மிகவும் உரியது. இவர் தலைநகரம் மதுரை. பாண்டியருள் ஒருவன் இமயஞ்சென்று மீனக்கொடி நட்டதாகத் தெரிகின்றது; எனினும், பெயர் தெரியவில்லை. முதலாம் நெடுஞ்செழியன் ஆரியப்படை கடந்ததாகமட்டும் கூறப்படுகிருன். இவ்வாரியர் தமிழ்நாட்டையடுத்து வாழ்ந்த சிலராக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவன் காலத்தே கண்ணகி கதை நிகழ்ந்தது. இவன் மடிவு, அவன்முன்பாக அரியணைமீதே நிகழ்வதாயிற்று. இவன் மனைவி பெருங்கோப்பெண்டு. இவனேடு ஒருகாலத்துச் சேரவேந்தன் செங்குட்டுவனுவான்.

இந் நெடுஞ்செழியன் தம்பி, வெற்றிவேற்செழியன். இவன் மதுரைக்கு வருமுன்பு கொற்கையில் ஆண்டிருந்தனன், இவன் தன் தமையன் மடிவுக்குக் காரணமான பொற்கொல்லன்மீது, சினங்கொண்டு, அக் குடிவந்தோர் ஆயிரவரைக்கொன்று கண்ணகிக்கு விழா எடுத்தான் எனக் கூறப்பட்டுளது.

அடுத்துச் சிறப்பு மிகப்படைத்து, கரிகாலனைப்போலவும், இமய வரம்பனைப்போலவும் பெருவேந்தனுய்ப் பாண்டியருள் விளங்கியவன், தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். இவன் யானைக்கட்சேய் என்ற சேர மன்னனைச் சிறைபிடித்தனன், இவனைப் புலவர்பலர் பாடியுள்ளனர். இவன் வென்றிச் சிறப்பும், அறிவும், ஆண்மையும் யாண்டும் விரியக் கூறப்பெற்றுள்ளன. இவன் இறந்தது வெள்ளியம்பலம் என்ற இடத்தில்.

இனி, கானப்பேரெயில் எறிந்தவனுன உக்கிரப்பெருவழுதி, பெருநற்கிள்ளி என்ற சோழமன்னனெடு ஒருகாலத்தே யிருந்தவன். இவன் அச் சோழனின் யாகத்தில் கலந்துகொண்டனன். பின் இவன்குடிப்பிறந்தவருள் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் குறிப்பிடத்தக்கவன்.

இம் மூவேந்தர்களையன்றி, கடையெழுவள்ளல் என்று சிறப்பிக்கப் படுகின்ற ஆய், அதிகன், காரி, ஓரி, பாரி, குமணன், பேகன் என்ற குறுநில

வேந்தர்களும், அவர்தோன்றிய ஆய், வேளிர், மழவர் முதலான அரச குடிவழிவந்த பிறரும், யவனர், கோசர், ஆரியர், ஆந்திரர் முதலான பல குழுவினரும் தமிழகத்தில் ஆங்காங்கு நிலவிவந்தனர் எனவும் அறியக் கிடக்கின்றது.

இம்மூவேந்தரின் காலம் ஏறக்குறைய 500 ஆண்டுகள் எனக் கொள்ளலாம். கி. பி. மூன்றும் நூற்றுண்டிற்கு முற்பட்ட வரலாறு மிகவும் தெளிவில்லாததொன்று. எனவே, அது தொடங்கி கி. பி. இரண்டாம் நூற்றுண்டினிறுதியுடன் தமிழ் வேந்தர் ஆட்சி நன்கு நிலவி மறைந்தது எனக் கருதலாம். இக்காலம் கடைச்சங்க காலம். புரவலரால் புலவரும் புலவரால் புரவலரும் ஓங்கினர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான சங்க விலக்கியங்கள் எழுதப்பட்டன. வடமொழி நூல்களிலும் தமிழ்நாட்டைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேனுட்டாசிரியர்கள் பலர் இங்குவந்து குறிப்புகள் எழுதிச் சென்றனர். மேனுடுகளுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருத்தவாணிபம் நடந்து வந்தது. நாடுகள் பற்பல உட்பிரிவுகளையுடையனவாய்ப் பிரிக்கப்பட்டு, ஆளப் பட்டன. வரி, தேர்தல் முதலான வழக்குகள் இருந்தன. படைக் கலங்களும் படைவகைகளும், போர்த்திறனும் மலிந்திருந்தன. நகரங்கள் எல்லாவளங்களும் செழித்து, அரண்கள் எடுக்கப்பட்டு, ஆடவர், மகளிர் அனைவரும் நல்ல கல்வி நலத்துடன் விளங்கினர். மொழிவகையால் தமிழகம், செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு எனப்பிரிக்கப் பட்டிருந்தது. சாதிப்பகுப்புகள் வேரூன்றவில்லை. சமயப்போர்கள் தொடங்கவில்லை; எனினும், அறுவகைச் சமயங்கள் மட்டும் நிலவின. பிறநாட்டார் பலர் இங்கு வந்து குடியேறியிருந்தனர். தமிழ் நாகரிகம் உலக நாகரிகத்தில் உச்சம் பெறும்படியிருந்தது. இங்ஙனமிருந்தமையால், அசோகனும், தமிழராட்சியை மிக மதிப்புடன் தன் கல்வெட்டுகளில் குறிப்பிட்டனன். எனினும், உள்நாட்டுப் போர்கள் மலிந்திருந்தன. இதுபோலும் வேறு சில காரணங்களால், நாளடைவில், தமிழ்வேந்தராட்சி அடங்கி யொடுங்குவதாயிற்று.

இங்ஙனம், தமிழ்வேந்தர் ஒடுங்குநிலையில், சோழநாட்டின் வடக்கே, தொண்டைநாடு எனப் புதியதோர் நாடு தோன்றிற்று. அதனை யாண்டவருள் சிறந்தவன் தொண்டைமானிளந்திரையன். அதன் தலைநகரம் காஞ்சி. இதன் சிறப்பையும், அம்மன்னன் சிறப்பையும் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் நன்கு பாடியுள்ளனர். இத்தொண்டைமான் சோழனொருவனுக்கு நாககன்னி வயிற்றில் தோன்றியவன் என்றவோர் கதையுமுண்டு.

இதே நாளில் வேங்கடத்திற்கு வடக்கே, தமிழ் வேந்தரோடு ஒரு காலத்தவராய் ஆந்திரர் என்போர் கி. மு. 3-ஆம் நூற்றுண்டு தொடங்கி,

கி. பி. இரண்டாம் நூற்றுண்டுவரை ஆண்டு பின் நசித்தனர். இவர் நசிப்பிற்குப் பின் பல்லவர்கள் தலையெடுத்தனர். இவர்கள் தொடக்கத்தில் சில சிறு குழுவினராய் இருந்தனர். நாளடைவில் ஆளுகையும் கைவரப் பெற்றனர். இவர்களின் ஆட்சித் தொடக்கத்தில், வடக்கே குப்த மன்னர்கள் மேலோங்கி விளங்கினர். சமுத்திர குப்தன் தெற்கே படையெடுத்த பொழுது, காஞ்சிபுரம் வரை வந்து திரும்பினன். அப்பொழுது காஞ்சியில் விஷ்ணுகோபன் என்பவன் ஆண்டதாகக் குறிப்பிடுகின்றனன். 4 முதல் 5-ஆம் நூற்றுண்டு முடியத் தமிழகவரலாறு இருள் மூடியதுபோல் தெளிவுபடாமல் இருக்கின்றது. இந்நாளில் களப்பிரர் என்ற சிறு கூட்டத்தார் தமிழகத்தில் பல குழப்பத்தையுண்டுபண்ணினர். கடுங்கோன் என்ற பாண்டியன் ஆறும் நூற்றுண்டின் இறுதியில் களப்பிரரிடமிருந்து தமிழக ஆட்சியை மீட்டும் பண்டைநிலைக்குக் கொணர முயன்றனன்.

## II

### பல்லவர் காலம்.

இந்நாளில் பல்லவர்கள், தொண்டைமண்டலத்தில், நன்கு வேரூன்றிக் கொண்டனர். இவர்கள் முற்கூறிய தொண்டையர் வழிவந்தவராய், இந்நாட்டிலேயே இருந்தவரென்றும், வடநாட்டுவழியே வந்த சக பார்த்திபர் வழியினர் என்றும், பலதிறக் கருத்துகள் உள. ஒன்றும் இதுகாறும் தெளிவுபெறவில்லை. இக்குடியிற் சிறந்தவனாய் முதலில் விளங்கியவன் சிம்மவிஷ்ணு. இவன் மகன் முதலாம் மகேந்திரவர்மன். (கி. பி. 600-625) இவன் தென்திசையில் படையெடுத்துத் தன் ஆட்சியைத்திருச்சிராப்பள்ளிவரை விரியச்செய்தனன். இவன் காலத்தில் மேலைச் சாளுக்கிய மன்னன் காஞ்சிவரைப் படையெடுத்துவந்து திரும்பினன். இவன் காலத்திற் பாண்டியர்கள் தம்மாட்சியைச் சிறிது சிறிதே வளர்த்துக்கொண்டிருந்தனர். 7-ஆம் நூற்றுண்டில், சோழர்கள் கடப்பை முதலான விடங்களில் அரசொடுங்கி வாழ்ந்து வந்தனரெனத் தெரிகின்றது.

இம் மகேந்திரவர்மன், முதன்முதல் மலைகளைக்குடைந்து, குகைக் கோயில்களை உண்டுபண்ணினன். இவனுக்கு ஓவியம், இசை, நாடகம் முதலான கலைத்துறைகளில் மிக்க விருப்பம். இவன் காலத்தே அப்பரடிகள் இருந்தனர். கல்வெட்டுகள் இவன் காலமுதலாகப் பெருகலாயின. சைவ சமணப்போர்கள் இவன் காலத்தில் வெளிப்பட்டு நின்றன.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

(தொடரும்)

# கரந்தைத் தமிழ்ச் சங்கம் புலவர் கல்லூரி

## இளங்கோவடிகள் தமிழ்க் கழகக் கூட்ட நிகழ்ச்சிகள்

### சித்திரபானு

க. ஆடி-உ (17—7—42)
தலைவர் :—திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், கல்லூரி ஆசிரியர்.
நிகழ்ச்சி :—அமைச்சர் விரிவுரையாளர் தேர்வுமுறை அமைப்பும், தேர்வும்.

உ. ஆடி-௯ (24—7—42)
தலைவர் :—அருட்டிரு சுவாமி விபுலானந்த அடிகள்.
விரிவுரைகள் :—(க) க. இரத்தினவேலன், "கல்வி", (உ) த. இராமச்சந்திரன், "தமிழும் தமிழரும்", (ங) துரைசாமி, "மயக்கம் மாறியது".

ங. ஆடி-உ௪ (8—8—42)
தலைவர் :—திரு. பண்டித, நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், கல்லூரித் தலைவர்.
விரிவுரைகள் :—(க) வ. குமாரசவாமி, "அரசும் அதனின்றியமையாமையும்" (உ) க. சுப்பிரமணியன், "உடலுறுதி" (ங) ந. சக்கரபாணி, "தமிழகம்".

௪. ஆவணி-ரு (21—8—42.)
தலைவர் :—திரு. வித்துவான் அரங்கசாமியார், ஆசிரியர், புலவர் கல்லூரி.
விரிவுரைகள் :—(க) N. குப்புசாமி, "ஒழுக்கம்" (உ) M. வேணுகோபால், "கடவுள் வணக்கம்" (ங) C. இராமசாமி, "அன்பு".

ரு. ஆவணி ௰ (26—8—42)
தலைவர் :—திரு பெரியசாமிப் புலவர், ஆசிரியர், புலவர் கல்லூரி.
விரிவுரை :—திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்களது 60-வது ஆண்டு நிறைவு குறித்து, அன்னாரின் வாழ்க்கை வரலாற்றுச் சிறப்புக்கள்.
திரு. வித்துவான், க. வெள்ளைவாரணனார், ஆசிரியர், புலவர் கல்லூரி; த. முத்துரத்தினம், சிவ. கந்தசாமி, ந. சக்கரபாணி சந்தானம்.

சு. ஆவணி-உ௰ (6—9—42)
தலைவர் :—திரு. S. இராமச்சந்திரப் பத்தர் அவர்கள், B. A.,
விரிவுரைகள் :—(க) சிவ. குப்புசாமி, "அருளுடைமை".
(உ) A. சகர்நாதன், "பிணியின்மை".

எ. புரட்டாசி-உ (18—9—42)
தலைவர் :—திரு. C. D. கலியாணசுந்தரம் பிள்ளையவர்கள், B. A. L. T. க. த. சங்கம் நடுத்தரப்பள்ளித் தலைமையாசிரியர்.
விரிவுரைகள் :—(க) அ. சாமிஐயா, "உயிர் வாழ்க்கைக்குச் சிறந்த வழிகள்" (உ) ம. கிருட்டினசாமி, "இளைஞர் உள்ளம்" (ங) த. முத்துரத்தினம், "கவிச் சுவை".

அ. புரட்டாசி-௧எ (3—10—42)
தலைவர் :—திரு. வித்துவான், ஐ. இராமையாச் சேதிராயர், தமிழாசிரியர்.
விரிவுரைகள் :—(க) D. சுப்பையன், "இசை இன்பம்" (உ) சதானந்தம், "மாணவர் வாழ்க்கை மாண்பு" (ங) சிவ. கந்தசாமி, "தமிழர் புதுமை".

௯. புரட்டாசி-உங (9—10—42)
தலைவர் :—தமிழாசிரியர், திரு. அ. பொன்னன்ணுக் களத்தில்வென்றார்.
விரிவுரைகள் :—(க) N. அரங்கநாதன், "இயற்கை எழில்" (உ) N. சாமிநாதன், "நூல் நிலையம்"

Regd. No. M. 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

## சங்க வெளியீடுகள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| உபந்நியாசங்கள் .... .... | 0 | 8 | 0 |
| கல்விப்பயிற்சிக்குரியது தாய்மொழி (செலவாகிவிட்டது) | | | |
| வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி .... ... | 0 | 3 | 0 |
| நக்கீரர் .... .... .... | 0 | 8 | 0 |
| அஞ்ஞானத்தின் வழக்கீடு (செலவாகி விட்டது) | | | |
| தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-தெய்வச்சிலையார் உரை .... | 1 | 8 | 0 |
| நால்வர் நான்மணி மாலை (விலையின்றிப் பெறலாகும்) | | | |
| சிலப்பதிகாரம்-புகார் காண்டம் (மூலமும் குறிப்பும்) | 0 | 4 | 0 |
| நெல்லை வருக்கக் கோவை .... .... | 0 | 1 | 0 |
| சித்தரந்தாதி (உரையுடன்) .... .... | 0 | 1 | 0 |
| கரந்தைக் கட்டுரை (வெள்ளி விழா வெளியீடு) .... | 3 | 0 | 0 |

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன் பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஆயுள்வரி | ௨௫ | ௦ | ௦ | ௨௫ | ௦ | ௦ |
| ஆண்டுவரி: | | | | | | |
| உறுப்பினருக்கும் மாணவர்க்கும் | ௨ | ௦ | ௦ | ௨ | ௮ | ௦ |
| ஏனையர்க்கு .... | ௩ | ௦ | ௦ | ௩ | ௮ | ௦ |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1, 2, 4–8 தொகுதிகள் | தொகுதி ஒன்று ரூ. | ௧ | ௦ | ௦ |
| 3, 11—17 தொகுதிகள் | தொகுதி ஒன்று ரூ. | ௩ | ௦ | ௦ |
| 9, 10 தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 15 முடிய 13 தொகுதிகளை மொத்தமாக வாங்கினால் | ரூ. | ௨௰ | ௦ | ௦ |

(அஞ்சற் செலவு வேறு)

**9, 10 தொகுதிகள் செலவாகி விட்டன.**

வெளியிடுவோர்:—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,

கரந்தை, தஞ்சை.